பக்கங்கள் 8 விலை சதம் 40 ★ ★

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 19 வைகாசி 10 ஜா: ஆகிர்: 4 இதழ்: 101
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 23-5-77

## குடியரசு எதிர்ப்பு ஊர்வலம் ரத்து

யாழ்ப்பாணம், திங்கள் தமிழ் இளைஞர் பேரவையினரால் ஒழுங்கு செய்யப்பட்ட கண்டன ஊர்வலம் கடைசி நேரத்தில் கைவிடப் பட்டது.

பொலிஸ் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகிமரணமடைந்த மலையக இளைஞனுக்கு அஞ்சலி செலுத்துமுகமாகவும், குடியரசை பகிஷ்கரிப்பதற்காகவும இவ்மௌன ஊர்வலம் ஒழுங்கு செய்யப்பட்டது. கடைசிநேரத்தில் கூட்டணி செயலதிபர் திரு. ஏ. அமிர்தலிங்கம்இளைஞர்களுக்குவிடுத்த வேண்டுகோளின்படி இது கைவிடப்பட்டது. தமிழர் விடுதலைக்கூட்டணி நடவடிக்கைக்குழு தீர்மானப்படி, தந்தை செல்வா மறைவினால் நாம் துக்கம் அனுஷ்டிக்கும் வேளையில் எந்த ஆர்ப்பாட்டத்தையும் எடுக்காமல் அமைதியாக பகிஷ்கரித்துஎதிர்ப்பை தெரிவிப்போம். ஆகவே, நீங்கள் இவ்வூர்வலத்தை நடத்தாமல் அமைதியாக விடுதலைக்கூட்டணிக் காரியாலயத்தில் கூட்டத்தைக்கூடி; குடியரசு அமைப்புக்கு எதிராக சங்கற்பம் எடுக்குமாறு திரு. அமிர்தலிங்கம் வேண்டினார். எனினும், இளைஞர்கள் ஊர்வலத்தை விடுத்து, அரியாலை பொதுமைதானத்தில் கூட்டத்தை நடத்துவோமெனக் கூறி அங்கு கூட்டத்தை நடாத்தினர். (செ)

# வடக்கு, கிழக்கில் கூட்டணி

# பேரணி, முன்னணி மோதல்!

## வேட்பாளர் தெரிவினால் தோன்றியுள்ள நிலை

(நமது அரசியல் நிருபர்)

**எதிர்வரும் பொதுத் தேர்தலை அமைதியாகவும் ஒழுங்காகவும் நேர்மையாகவும் நடத்துவதற்கான சகலநடவடிக்கைகளையும் தேர்தல் திணைக்களம், பொலிஸ் பகுதி ஆகியவை மேற்கொண்டு அவற்றிற்கான திட்டங்களையும் தயாரித்துப் பூர்த்தி செய்துள்ளன.**

ஆளும் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சி, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, இடதுசாரி ஐக்கிய முன்னணி, மற்றும் கட்சிகளும் தங்கள் வேட்பாளர்களைப் பெரும்பாலும் தெரிவு செய்து அறிவித்துள்ளன.

வேட்பாளர் தெரிவு சம்பந்தமாகத் தென்னிலங்கையிலுள்ள கட்சிகளுக்குள்ளும் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது. சிலர் கட்சிகளிலிருந்து வெளியேறுகின்றனர்.

### இன்னமும் பிரச்னை

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழர் விடுதலைக் கூட்டணி சேருவிலத் தொகுதியைத் தவிர இதர தொகுதிகளுக்கு தனது வேட்பாளர்களைத் தெரிவு செய்து அறிவித்து விட்டது. வேட்பாளர் தெரிவில் அதிருப்தியடைந்த தொகுதிகள் சிலவற்றில் ஆர்ப்பாட்டம், சத்தியாக்கிரகம், தூதுக்குழு என்பன நடந்த போதிலும் பின்னர் அவை அடங்கிவிட்டன.

சிலதொகுதிகளில் வேட்பாளர் நியமனம் கூட்டணிக்கு இன்னமும் பிரச்னையாக இருப்பதுடன் வேறு பல பிரச்னைகளையும் ஏற்படுத்தியிருப்பதாக அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகிறது.

சுறுசுறுப்பாக இறங்கத் தொடங்கியுள்ளனர்,

இதுமட்டுமல்ல திரு குமார் பொன்னம்பலத்தைத் தனித்து விடாமல் மேலும் ஏழு தொகுதிகளில் காங்கிரஸ் வாலிப முன்னணியின் சார்பில் வேட்பாளர்கள் நிறுத்தப்படவிருக்கின்றனர். இப்போதுள்ள நிலையில் யாழ்ப்பாணத்தில் திரு. குமார் பொன்னம்பலமும், சாவகச்சேரியில் திரு வி. குமாரசாமியும் மானிப்பாய்த் தொகுதியில் திரு முதலியாரும் காங்கிரஸ் வாலிப முன்னணி வேட்பாளர்களாக நிறுத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாகத்தெரிய வருகிறது.

திரு குமார் பொன்னம்பலம் பருத்தித்துறைத் தொகுதியில் தான் கேட்கவேண்டுமென்று கோரி அங்கிருந்து வந்த தூதுக்குழுவொன்றிடம் யாழ்ப்பாணத் தொகுதியில் திரு குமார் போட்டியிட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டதற்கான காரணம்

### யாழ். தொகுதியில் குமார் நிச்சயம்

கூட்டணியில் ஓர் அங்கமாக விளங்கும் தமிழ்க் காங்கிரஸின் வாலிப முன்னணித் தலைவரும் அமரர் ஜி ஜி பொன்னம்பலத்தின் மகனுமான திரு குமார் பொன்னம்பலத்துக்கு கூட்டணி வேட்பாளர் நியமனக் குழு ஒரு தொகுதியை ஒதுக்கிக் கொடுக்காததால் திரு. குமார் பொன்னம்பலம் இப்போது யாழ்ப்பாணத் தொகுதியில் காங்கிரஸ் வாலிப முன்னணி வேட்பாளராகப் போட்டியிடுவது நிச்சயமாகி விட்டது. திரு. குமார் பொன்னம்பலம் யாழ்ப்பாணத் தொகுதியில் ஆதரவு திரட்டத் தொடங்கி விட்டார், அவரது ஆதரவாளர்கள் தேர்தல் பிரசாரத்தில்

விளங்கப்படுத்தப் பட்டதாகவும் அவர்களும் அதை அரைமனதுடன் ஏற்றுத் திரும்பிச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

பலருக்கும்கூட அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாம்.

இந்தஅதிருப்தியின் எதிரொலி பல சந்தர்ப்பங்களில் பலவிதமாகக் கேட்டதாயினும் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை முல்லைதீவிலிருந்தும் மற்றும் சிலபகுதிகளிலிருந்தும், வந்த சுமார் ஐநூறுபேர் திரு. ஆலாலசுந்தரத்தின் வீட்டின் முன்னால் சத்தியாக்கிரகம் செய்தனர். முல்லைத்தீவில் அல்லது வேறு எந்தத் தொகுதியிலாவது போட்டியிடுமாறு அவர்கள் வற்புறுத்தினர். இவர்களுக்குச் சமாதானம் சொல்லி அனுப்பிய திரு. ஆலாலசுந்தரம் தம்மிடம் வந்து இப்படிக்கேட்பது முறையல்லவென்றும் வேண்டுமானால் கூட்டணித் தலைமைப் பீடத்திடம் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ளலாமென்றும் கூறினார்.

### ஆலால் வீட்டின்முன் ஆர்ப்பாட்டம்

இதேசமயம் தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாகு முன்னரே தமிழரசுக்கட்சியிலிருந்தும் பின்னர் கூட்டணிக்காகவும் சுமார் கால்நூற்றுண்டு காலமாகத் தொண்டனாகவே இருந்து பணியாற்றிய திரு. ஆலாலதுக்கு ஒரு தொகுதியாவது ஒதுக்கப்படவில்லையென்பது கூட்டணியிலுள்ள இளைஞர்கள் பலருக்கும் மற்றும் முதியவர்கள்

### பேரணி வெளியே வருகிறது

இதேசமயம் கூட்டணியின் வேட்பாளர் நியமனம்தொடர்பாக அதிருப்திகொண்டுள்ள இளைஞர்கள் பலர் கூட்டணிக்குள்ளேயே கடந்த ஐந்து வருடங்களாக இயங்கிவந்ததாகக் கூறப்படும் தமிழர் விடுதலைப் பேரணி தனியாக இயங்கத் தொடங்குவதற்கு முன்வந்துள்ளது.

தமிழர் விடுதலைப் பேரணி ஒரு அரசியல் கட்சியல்லவென்றும், கூட்டணிக்குச் சிக்கல்கள், சிரமங்கள் கஷ்டங்கள் ஏற்படும் சமயங்களில் இந்தப் பேரணி காப்பணியாக செயல்பட்டுவந்துள்ளதென்றும் இனி அது மறைமுக இயக்கமாக இல்லாமல் மக்கள் இயக்கமாக மாறி தனது வேட்பாளரை நிறுத்தி தொகுதிகள் சிலவற்றைக்காப்பாற்றிப் பின்னர் கூட்டணியுடன் சேர்ந்து இயங்குமென்றும் பேரணியையச் சேர்ந்தவர்கள் கூறுகின்றனர்.

கூட்டணியின் வேட்பாளர்கள் சிலர் போட்டியிடும் சில தொகுதிகளில் அவர்களின் வெற்றிக்காகவும் பேரணியினர் பிரசாரம் செய்வராம்.

## சுயாட்சிக்கழகத் தலைவர் போட்டியிடுவார்

யாழ்ப்பாணம், திங் 'ஊர்காவற்றுறைத் தொகுதியில் தமிழர் சுயாட்சிக் கழகத் தலைவர் திரு வி நவரத்தினம் போட்டியிடுவது உறுதி' என்று தமிழர் சுயாட்சிக் கழக துணைச் செயலாளர் திரு என் ஸ்ரீகாந்தா தெரிவித்தார்'

'திரு நவரத்தினம் போட்டியிடமாட்டார் என்ற [illegible] என்றும் அவர் சொன்னார்,

'ஊர்காவற்றுறை, திருக்கோணமலை, கோப்பாய், முல்லைத்தீவு ஆகிய தொகுதிகளுக்கு வேட்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர், சாவகச்சேரி, பருத்தித்துறை, வட்டுக்கோட்டை, நல்லூர், கிளிநொச்சி ஆகிய தொகுதிகளுக்கான வேட்பாளர் பட்டியல் இன்னும் சில தினங்களில் அறிவிக்கப்படும் அதன் பின் [illegible] பட்டியல் [illegible] றும் திரு ஸ்ரீகாந்தா [illegible] துள்ளார். (உ)

## ஒன்பது பேரும் கைது!

கொழும்பு, ஞாயிறு புசல்லாவ டெல்டா தோட்டத்தில் கடந்த செவ்வாயன்று இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக பொலி

(8-ம் பக்கம் பார்க்க)

## லட்சம்பேர் தபால் மூலம் வாக்களிப்பர்

யாழ்ப்பாணம், திங்கள் எதிர்வரும் பொதுத்தேர்தலில் தபால்மூலம் வாக்களிக்க விரும்புவோர் தேர்தல் தொகுதியின் தேர்தல் அதிகாரிக்கு நியமனத் திகதியான 6-ந் திகதிக்கு பத்து தினங்களுக்கு முன்பதாக அறிவிக்க வேண்டும். இதற்கான சுற்று நிருபங்கள், சகல திணைக்களங்களுக்கும் தேர்தல் ஆணையாளரால் அனுப்பிவைக்கப் படும்.

இம்முறை பாதுகாப்பு, தேர்தல் உத்தியோகத்தர்களாக ஒரு லட்சத்துக்குமதிக மானோர் சேவையாற்றுவதால் இவர்கள் தபால் மூலமே வாக்களிக்க முடியும். இம்முறை 168 தொகுதிகளில் 66 லட்சத்து 67 ஆயிரத்து 589 பேர் வாக்களிப்பார்கள். தேர்தல் இடாப்புக்களை இம்மாதம் 25-ந்திக்கு முதல் தேர்தல் அலுவலகங்களில் மக்கள் பார்வையிட முடியும். (செ)

## தொண்டமான் உதாரணம்

மஸ்கெலியா நுவரெலியாத் தொகுதியில் போட்டியிடும் தமிழர் விடுதலைக்கூட்டணியின் இன்றைய ஒரேயொருதலைவரான திரு. எஸ். எஸ். தொண்டமான் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வேட்பாளராகவே போட்டியிடுகிறாரென்றும் மட்டக்களப்பில் திரு. செ. இராசதுரையும் கவிஞர் காசி ஆனந்தனும் வெவ்வேறு தேர்தல் சின்னத்தில்போட்டியிடவிருப்பதையும் பேரணியினர் சுட்டிக்காட்டுகின்றனர்.

### சுயாட்சிக்கழகத் தலைவர்

தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு ஏற்பட்டுள்ள மற்றொரு பிரச்னை தமிழர் சுயாட்சிக்கழகத்துக்கு இரண்டு தொகுதிகளை ஒதுக்கிக்கொடுக்கமறுத்ததால் சுமார் பன்னிரண்டு தொகுதிகளில் சுயாட்சிக்கழகம் போட்டியிடவிருப்பதாகக் கூறப்படுகிறது.

சுயாட்சிக்கழகத் தலைவர் திரு. வ. நவரத்தினம் ஊர்காவற்றுறைத் தொகுதியில் போட்டியிடுவது உறுதி என்று கழகம் கூறுகிறது.

திரு. யோகேந்திரா துரைசாமியை அமைப்பாளராகக் கொண்ட தமிழ்மக்கள் இயக்கமும் சில கட்சிகளைச்சேர்த்து ஐக்கிய இயக்கம் ஒன்றை உருவாக்கவிருக்கிறதாம்..

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கொழும்புத்துறை இல: 18 சுவாமியார் வீதியில் 2 பரப்பு டன்புதிதாக கட்டப்பட்டவீடு விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். N. அன்ரனிப் பிள்ளை 22, கோவில் வீதி, யாழ்ப்பாணம். 6258

மயிலப்புலம் வீதியில் தென்னிங்கன் வயல் 43 பரப்பு விற்பனைக்கு உண்டு. வீடுகட்ட உகந்த இடம். அரசாங்கத்தில் கடன்பெற சுத்தமான உறுதி. 10 பரப்பு துண்டு காணியும் பெற்றுக்கொள்ளலாம். வாங்க விரும்பியவர்கள் திரு. தி. சிவநாதன், இல: 2, பீ ஏ. தம்பி ஒழுங்கை, வண்ணார் பண்ணை அவர்களை நேரில் தொடர்பு கொள்ளவும். 6219

### வகுப்புகள்

வெல்டிங் (Electric & Gas மூன்று மாதம், இலெக்றிக் வயறிங் மூன்று மாதம், ரேடியோ அறுமாதம் காலை, பிற்பகல், மாலை நேர வகுப்புகள் எமது N.I.E.T. டிப்ளோமா பெற்று வெளிநாடுகளில் ஏராளமானோர் வேலை பார்க்கிறார்கள். National Institute of Engineering Technology மைற்றமண்டபம், 128, பருத்தித் துறை வீதி, யாழ்ப்பாணம். 6210

### தேவை

சகலவிதமான மோட்டார் (Motor) வைண்டிங்கில் ஐந்து வருட அனுபவமும், வாட்டர் பம்புகள் பழுது பார்க்கக்கூடிய வராகவும், நற்குணங்கள் உள்ள ஒருவர் தேவை. சம்பள விபரம் நேரில் பேசலாம். நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும். நியூ ரோன் எலெக்றிக்கல்ஸ், 141, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 6257

THE JAFFN ACADEMY

376. Main Street, Chundikuli. Phone 617. Week-end classes (Saturdays & Sundays) for the C. E. I. Parts I and II May 1978 Examinations commence on Saturday 4th June.

Apply on forms obtainable from Academy office. Application close on 31st May.

Directer.

9-5-77.

6139

மாணவர் மதிப்பீட்டுப் பதிவேடு

1,2,3,4,5ஆம் வகுப்புக்கள்.

புதியமுறையில் ஒரே தனிப் பிரதியாகத் தயாரிக்கப்பெற்றது.

விலை ரூ. 3-00

தொகையாகப் பெறுபவர்களுக்குத் தகுந்த கழிவு கொடுக்கப்படும்.

சொற்ப பிரதிகளே கைவசம் உள.

சுன்னாகம் தனலக்குமி புத்தகசாலை


யாழ். குடியரசுவிழா

# பொருளாதார சுதந்திரம்பெற நம்மை அர்ப்பணிப்போம்

யாழ்ப்பாணம், திங்கள் ''அரசியல் சுதந்திரம்பெற்று விட்டோமென நினைத்துக் கொண்டு, நாம்சோம்பேறிகளாக காலத்தைக்கழிப்போமானல். நாம் பெற்ற சுதந்திரத்தால் பயன் எதுவுமில்லாமல் போய்விடும் சகல இன மக்களும் ஒருங்கிணைந்து பொருளாதாரச் சுதந்திரத்துக்கு போராடினுல் தான் நாம் பெற்ற அரசியல் சுதந்திரத்தை அனுபவிக்க முடியும்'' என்று யாழ், செயலகத்தில் நேற்று நடைபெற்ற குடியரசுதின வைபவத்தில் வடபிராந்திய கல்விப்பணிப்பாளர் திரு. கே சிவநாதன் பேசுகையில் கூறினுர். தேசியக் கொடிக்கு முப்படைத் தளபதிகள் மரியாதைசெய்ய, அரசாங்கஅதிபர். திரு. டபிள்யு ஏ. எல்விஜயபால கொடியை ஏற்றிவைத்தார்தேசியக்கீதத்தை நல்லூர் அண்ணமலை இசைத்தமிழ் மன்றத்தினரும், சிங்களத்தில் சிங்கள மகா வித்தியாலய மாணவர்களும் பாடினர். மங்களவாத்தியத்தை, திருக்குடும்ப கன்னியர் மட மாணவிகளும் சுண்டிக்குளி மகளிர் கல்லூரிமாணவிகளும் இசைத்தனர்.

இதனைத்தொடர்ந்து அரசாங்க அதிபர் திரு. டபிள்யு. ஏ. எல். விஜயபால உரையாற்றுகையில் இன்று நாம் 5-வது சுதந்திர தினத்தை கொண்டாடிக் கொண்டிருக்கின்ருேம். பிரிட்டிஷாரின், அதிகாரத்துக் குட்பட்டிருக்கலாம், அரசியல் சுதந்திரம் பெற்று, சமதர்ம, குடியரசு ஒன்றை நிறுவி, சகல இனத்தவர்க்கும் சேவையாற்றி வருகின்ருேம். நமது பொருளாதாரத்தில் தன்னிறைவு காண்பதே இன்று நாம் எடுக்கும் சங்கற்பமாகும் என்று கூறினுர்

மேலதிக அரசாங்க அதிபரும், யாழ். மாநகரசபை விசேட ஆணையாளருமான திரு. ஏ. யோசப் உரையாற்றுகையில், ''கடந்த அரசாங்கங்களிலும் பார்க்க, அரசியல் சுதந்திரத்திற்காகவும், பொருளாதாரச் சுதந்திரத்திற்காகவும் உழைத்த அரசாங்கம் இந்த அரசாங்கமேயாகும். இந்த அரசாங்கத்திஞல் பல அபிவிருத்தித் திட்டங்களும், நாட்டில் பல வாலிபர்களுக்கு வேலைவாய்ப்பு வசதியும், பிரதேச அபிவிருத்திசபை, கிராமிய வங்கிபோன்ற செயல்திட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டு சேவையாற்றி வந்திருக்கின்றது.

''பொருளாதார சுதந்திரத்தில் தன்னிறைவு பெற இவ்வரசு பலவகையிலும் போராடிவருகின்றது. இதற்கு நாமும் இலட்சிய வேட்கையுடன் எமது நாட்டின் சுபீட்சத்துக்கு உழைக்க இக்குடியரசு தினத்தில் திடசங்கற்பம் எடுக்கவேண்டும்'' என்ருர். விழாவில் வடபிராந்திய முப்படைத் தலைவர்கள், உயர் அதிகாரிகள், பாடசாலைத் தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர். [கெ]


HAYCHEM LTD.

400 Deans Road, Colombo-10.

BAYER

# வெங்காயச் செய்கை

## வெங்காயம் பயிரிடும் விவசாயப் பெருமக்களே!

## ஓர் முக்கிய அறிவிப்பு:-

வழமையாகவுபந்தொகையில் வெங்காயம் நாட்டும் முக்கியகாலம் அண்மித்துக் கொண்டிருக்கிறது. கிட்டடியாக நடைபெற்ற புழுத்தாக்கம் இந்த முக்கிய பருவத்தில் வெங்காயச் செய்கையைக் கைவிடவோ என உங்கள் மனதைக் குழப்பிக்கொண்டிருக்கிறது. வெங்காயச் செய்கையில் களைகட்டும் செலவையும் எண்ணி பயிரின் பலனைப் பற்றியும் அதிர்ச்சி அடைகிறீர்கள்.

கீழ்க்காணும் புத்திமதிகளை ஏற்று நடந்தால் வெங்காயச் செய்கையில் ஒரு வெற்றியீட்டும் பலனைப் பெறுவீர்கள்.

1 நிலத்தைப் பண்படுத்திய பின்பு ஆனல் பாத்திகள் கட்ட முன்பு 1000 கன்றுத் தரைக்கு 2 பாக்கெட் 2Kg குரேட்டர் (CURATERR) மணிகளைத் தூவுங்கள். (கிட்டத்தட்ட ஒரு ஏக்கருக்கு 18Kg வேண்டும்) மண்ணுடன் கலந்தபின் பாத்திகளைக் கட்டி வாய்க்கால்போடவும். பின் இந்த 1000 கன்றுத் தரைக்கும் ½ அந்தர் ஆவது வெங்காய உரக்கலவையைத் தூவவும்.

(குறவணன் தாக்கம் உள்ள இடங்களில் பாத்திகள் கட்ட முன்பும், பசளையை மண்ணுடன் கலக்கமுன்பும் 1000கன்றுத் தரைக்கு 2Kg கொண்ட 2பாக்கெட் டெரக்கூர் (TERRACUR) போடவும்).

2 வழமைபோல் வெங்காயத்தை நாட்டவும்.

3. அடுத்தநாள் றைபியூனில் (TRIBUNIL) என்னும் களை நாசினியைத் தெளிக்கவும். (1000 கன்றுத்தரைக்கு 150 கிரும் றைபியூனில் 12 கலன் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்).

4. வழமைபோல் நீர் பாய்ச்சவும்.

5. 10வது தொடக்கம் 12வது நாள்வரைக்குள் 1000 கன்றுத்தரைக்கு ¼ அந்தர் ஆவது யூறியா போட்டு நீர் பாய்ச்சவும்.

6. 15வது நாள் திரும்பவும் றைபியூனில் தெளிக்கவும்.

7. 20ற்கும் 23வதுநாளிற்கும் இடையில் பேருசில் (BAYRUSIL) தெளிக்கவும். (7 அவுன்ஸ் பேருசில் 14கலன் தண்ணீரில் கலந்து 1000 கன்றிற்கு தெளிக்கலாம்.)

8. 28வது நாளிற்கும் 31 நாளிற்குமிடையில் முன்பு போல் பேருசில் இன்னொரு முறை அடிக்கவும். பேருசில் தெளித்த அடுத்தநாள் ¼ அந்தர் யூறியாப் போட்டுஇறைக்கவும்.

9. 40வது நாள் திரும்பவும் பேருசில் தெளிக்கவும்.

மேற்கூறியவற்றின்படி நடந்தால் எல்லாப் பூச்சி புழுக்களையும், களைகளையும் கட்டுப்படுத்தலாம். அத்துடன் பயிருக்குத் தேவையான போஷாக்குச் சத்துக்களையும், நீரையும் கொடுக்கிறீர்கள். எனவே முதற்தரமான வெங்காய விளைவைப்பெறுவீர்கள்.

### குறிப்புகள்:

### றைபியூனில்

ஈரமான தரையில் அல்லது நீர்ப்பாய்ச்சமுன்பு றைபியூனில் தெளிக்கவும். அப்படிச் செய்தால் புல் களைகளையும், அகன்ற இலைக் களைகளையும் கட்டுப்படுத்தலாம். குறித்த அளவின்படியும், கூடுதலாகத் தெளியாமலும் றைபியூனில் தெளித்தால் வெங்காயத்தைப் பாதிக்காது.

### குரேட்டர் மணிகள்

நிலத்தில் வீசி மண்ணுடன் கலந்தாலும் பயிரின் வேர்களினுல் உட்கொள்ளப்பட்டு, பயிரின் முழுப்பாகத்திலும் செறிந்து, உறிஞ்சிச் சாறு குடிக்கும் பூச்சிகளும், அரித்துத் தின்னும் புழுக்களும் நீண்டாவண்ணம் 4 தொடக்கம் 5 வாரம்வரை பாதுகாக்கும். இது வெங்காயப் பயிருக்கு ஒரு காப்புறுதி. வெங்காயப்பூடு நாட்டி முளைகட்டியபின் இக்குரேட்டர் மணிகளைப் பாவித்தால் அறுவடை செய்யும் நேரத்திலும் வெங்காயப்பூடினுள் நஞ்சு எஞ்சிநின்று மனிதனுக்கே தீங்கு விளைவிக்க நேரிடும். ஆகவே நடுகையில் மாத்திரம் குரேட்டர் பாவியுங்கள்.

### பேருசில்

அண்மையில் இலைஅரிபுழு வெங்காயப் பயிரை முழுநாசமாக்கிவிட்டது. பேருசில் ஒரு பொதுப்பூச்சிநாசினியாயிருந்தபோதிலும் பூச்சிபுழுக்களினுடைய முட்டைக் கருவை பொரிக்கமுன்பே அழித்துவிடுமென விவசாய இலாகா சிபார்சு செய்திருக்கிறது.

ப்பயர் முறைகளைப் பின்பற்றி உங்கள் பயிர்களையும் லாபங்களையும் பாதுகாப்பீராக!

க.நா. ஜெயசிலன்,

(இளைப்பாறிய மாவட்ட விவசாய அதிபரும், ஹேகெம் ஸ்தாபன வடபிராந்திய தொழில் நுட்ப ஆலோசகரும்).

'ஈஸ்வர இல்லம்' கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

6251


# ஆசிரியர்களின்கோரிக்கை: கவனிப்பதாகஉறுதி

யாழ்ப்பாணம், திங்கள் சில்வா சம்பளக் கமிஷன் அறிக்கைப்படி தமிழாசிரியர்களுக்குச் சேரவேண்டிய சம்பள நிலுவைகள் வழங்கப்படுவதிலுள்ள தடங்கல்களைச் சீர்செய்வற்குத் தம்மால் முடிந்த முயற்சிகளை மேற்கொள்வதாகத் தம்மைச் சந்தித்துப் பேசிய தமிழாசிரியர் சங்கத் தூதுக்குழுவிடம்வடபிராந்திய கல்விப்பணிப்பாளர் திரு. க. சிவநாதன் தெரிவித்தார்.

சங்கத்தலைவர் திரு. டி. எஸ். கே. வணசிங்கா தலைமையில் யாழ். மாவட்டத்தமிழாசிரியர் சங்கத்தலைவர் திரு தி நடராஜா, செயலாளர் திரு சி சிவபாலசிங்கம் ஆகியோர் பணிப்பாளர் திரு சிவநாதனை சந்தித்தனர்.

சில்வா சம்பள அறிக்கைப்படி நிலுவைகள் வழங்கப்படாமை, வெளி மாவட்டங்களில் இருந்து மாற்றலாகி இங்கு சேவையாற்றும் ஆசிரியர்களது சுயஅறிக்கைக் கோவை மாற்றப்படாமை, 6ம் வகுப்புக்கு மேலுள்ள சகல பாடசாலைகளிலும் கணித, விஞ்ஞான ஆசிரியர் பற்றுக்குறை ஆகிய மூன்றுகோரிக்கைகள் குறித்துத் தூதுகோஷ்டி பேசியது.

சில்வா சம்பள அறிக்கைப்படி உள்ள தடங்கல்களைச் சீர் செய்யத் தம்மாலான முயற்சிகளை மேற்கொள்வதாகவும் வெளியிடங்களிலிருந்து மாற்றம் பெற்ற ஆசிரியர்களுக்கு தனியாக ஒரு அதிகாரியை நியமித்து சுயவிபரக் கோவையை இக்காரியாலயத்துக்கு மாற்ற ஆவனசெய்வதாயும், ஆசிரியர்பற்றுக்குறையை அனுதாபத்தோடுஅணுகுவதாகவும் வாக்களித்தார். (கெ-அ)

## செல்வா பெயரால் அன்னதானம்

யாழ்ப்பாணம், திங்கள் தந்தை செல்வா அமரராகி முப்பத்தோராம் நாளான இம்மாதம் 26ம் திகதி யாழ்ப்பாண. வாலிபர்கள் பஸ்ரியன் அச்சகச் சந்தியில் அன்னதானம் செய்ய உள்ளார்கள் இதற்கான ஏற்பாடுகளைச் சபா செந்துராச தலைமையிலான வாலிபர்கோஷ்டி ஒன்று செய்துவருகிறது, இவ்வைபவத்தில் கூட்டணிப் பிரமுகர்களும் கலந்துகொள்வார்களாம். [கி-அ]

## யோகேஸ் - குமார் சந்திப்பு

யாழ்ப்பாணம், திங்கள் யாழ்ப்பாணத் தொகுதியின் முக்கிய வேட்பாளர்கள் இருவர் நேற்றுக் கோவில் வீதிச் சந்தியில் நேர்நேராகச் சந்தித்துக் கொண்டனர். இவ்வாறு சந்தித்துக்கொண்டவர்கள் திரு. யோகேஸ்வரனும் திரு. குமார் பொன்னம்பலமும் தான். இவர்கள் இருவரும் தத்தமது கார்களில் இருந்து இறங்கி அருகிலிருந்த கடையுயில் மிகவும் நட்புறவோடு சுமார். 15 நிமிஷம் சம்பாஷித்தனர். (கி அ)

## கும்பழாவளை உற்சவம்

பண்டத்தரிப்பு, திங்கள் அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவம் ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இம்மாதம் 31-ந் திகதி செவ்வாய்க் கிழமை தேர் உற்சவமும் மறுநாள் தீர்த்த உற்சவமும நடைபெறவுள்ளன. (அ)

# கருணாநிதியை தோற்கடிக்க கடும் முயற்சி! எம்.ஜி.ஆர். கோரிக்கைமீது ஹண்டே விலகினார்

## பத்து மாநில சட்டசபைத் தேர்தல்களின் இறுதிக் கட்டங்கள் பூர்த்தி

புதுடில்லி, மே 22

பாரதத்தின் பத்து மாநிலங்களுக்கும், 2 யூனியன் பிரதேசங்களுக்கும் அடுத்தமாத நடுப்பகுதியில் நடைபெறும் சட்டசபைத் தேர்தல்களுக்கான இறுதிக்கட்டம், வேட்புமனுக்களை வாபஸ்பெறும் கடைசி நடவடிக்கைகளைத் தொடர்ந்து முடிவடைந்துவிட்டது. இம் மாநிலச் சட்டசபைத் தேர்தல்களில் கட்சிகள் காட்டும் சுறுசுறுப்பு, எதிர்பாராத அற்புத முடிவுகளைத் தேடிக்கொடுக்கலாம் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

### பல்முனைப் போட்டி

நடைபெறவிருக்கும் சட்டசபைத் தேர்தல்களில் அதிகமான தொகுதிகளில் பல்முனைப் போட்டிகளே இடம்பெறுகிறது. மிகச்சில இடங்களில் மட்டுமே நேரடிப் போட்டியும் மும்முனைப் போட்டியும் நடைபெறும்.

பஞ்சாப்பில் 103 தொகுதிகளில் 510 பேர் போட்டியிடுகின்றார்கள். பட்டியாலா எனும் ஒரு தொகுதியில் மட்டும் பத்தொன்பதுபேர் போட்டியிடுகின்றனர்.

### மாநிலங்கள் வாரியாக

ராஜஸ்தானில் 200 தொகுதிகளில் 1,156 பேர் போட்டியிடுகின்றார்கள். 18 தொகுதிகளில் ஜனதாவும் காங்கிரஸ் கட்சியினரும் நேரடியாகப் போட்டியிடுகின்றார்கள்.

### தமிழ்நாடு

தமிழ்நாடு சட்டசபையின் 234 தொகுதிகளிலும் கடுமையான போட்டியிருக்கும் என்று பார்வையாளர்கள் கூறுகின்றனர். அண்ணாநகரில் கலைஞர் கருணாநிதியை எதிர்த்து 8பேர் போட்டியிடுகின்றனர். இத்தொகுதியில் சுயேச்சையாகப் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்திருந்த எழுத்தாளர் ஜெயகாந்தன் தமது மனுவை வாபஸ் பெற்றுக்கொண்டார். முன்னாள் எம். எல். ஏ. திருமதி அனந்தநாயகியும் சட்டசபைத் தேர்தலில் போட்டியிடுகின்றார்.

தமிழ்நாடு சட்ட சபையில் இம்முறை பெரும்பாலான புதுமுகங்களே தி. மு. கழகத்தில் போட்டியிடுகின்றன. ஒருசில தொகுதிகளில் மட்டும் சில முன்னாள் எம். எல். ஏ.க்கள் போட்டியிடுகின்றனர்.

அண்ணாநகர் தொகுதியில் கலைஞர் கருணாநிதி, ஆயிரம் விளக்கு தொகுதியில் எஸ். ஜே சாதிக்பாட்சா, செய்யாறு தொகுதியில் புலவர் கோவிந்தன், திருவண்ணாமலையில் திரு. ப. உ. சண்முகம், புரசைவாக்கம் தொகுதியில் அன்பழகன் ஆகியோர் இம்முறை போட்டியிடும் அமைச்சர்களாவர்.



### ஹண்டே வாபஸ்

தமிழ்நாடு அண்ணாநகரில் தமிழக முன்னாள் முதல்வர் திரு. மு. கருணாநிதியை எதிர்த்துப் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்திருந்த டாக்டர் ஹண்டே எம். ஜி. ஆரின் வேண்டுகோளை அடுத்து தமது மனுவை வாபஸ் பெற்றுக்கொண்டார்.

அண்ணாநகரில் போட்டியிடும் அ இ அ தி மு க வேட்பாளர் திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தியை ஆதரிக்கும் பொருட்டே டாக்டர் ஹண்டே விலகிக்கொண்டார்.

ஆரம்பத்தில் ராஜாஜியின் சுதந்திராக் கட்சியில் உறுப்பினராக இருந்த டாக்டர் ஹண்டே அதிலிருந்து விலகி அ தி மு க வில் சேர்ந்திருந்தார். பின்னர் அ தி மு க விலிருந்தும் விலகிய அவர் அண்ணாசாலை தொகுதியில் சுயேச்சை வேட்பாளராக மனு தாக்கல் செய்திருந்தார்.

திரு. கருணாநிதியைத் தோற்கடிக்கவே இவ்வாறு நடவடிக்கை மேற்கொண்டுள்ளார் என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர்.

அரியானாவில் 90 தொகுதிகளிலும் 996 பேர் போட்டியிடுகின்றனர். 670 பேர் தங்களது வேட்புமனுக்களை வாபஸ் பெற்றுக்கொண்டனர்.

ஹிமாசல் பிரதேசத்தில் ஐந்து தொகுதிகளில் நேரடிப் போட்டி நடைபெறுகிறது. 68 தொகுதிகளில் 326 பேர் போட்டியிடுகின்றனர். குஜராத்தில் நடைபெறும் இடைத் தேர்தலில் ஒன்பது சட்டசபைத் தொகுதிகளிலும் 38 பேர் போட்டியிடுகின்றனர். 45 பேர் தங்களின் வேட்புமனுக்களை வாபஸ்பெற்றுக் கொண்டனர்.

### பாண்டிச்சேரியில்

## எம். ஜி. ஆர்-27; தி.மு.க -26 காங்கிரஸ் - 21

பாண்டிச்சேரி, மே 22

பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தில் உள்ள 30 தொகுதிகளிலும் 131பேர் போட்டியிடுகின்றனர். 27 தொகுதிகளில் அ. இ. அ. தி. மு கவும் 21 தொகுதிகளில் காங்கிரஸும் 26 தொகுதிகளில் தி. மு. கவும் போட்டியிடுகின்றன.

எந்தத் தொகுதியிலும் நேரடிப்போட்டி இல்லை. 20 பேர் சுயேச்சையாகப் போட்டியிடுகின்றனர். (இ)

## ஜெயப்பிரகாஷ் தாயகம் திரும்பினார்

பம்பாய், மே. 22

அமெரிக்காவில் சத்திர சிகிச்சை செய்தபின்னர் நாடு திரும்பிய திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் நேற்றுக்காலை பம்பாய் வந்துசேர்ந்ததும் அங்குள்ள ஆஸ்பத்திரி ஒன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நீண்டபயணம் காரணமாக சோர்ந்துபோயுள்ள அவருக்கு நீண்டஓய்வு தேவை என்றும் 3 நாட்கள், எவரும் அவரைப் பார்வையிட அனுமதிக்கமாட்டார்கள் என்றும் டாக்டர்கள் தெரிவித்தனர்.

நேற்றுக்காலை பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் தொலைபேசியில் ஜெயப்பிரகாஷுடன் தொடர்புகொண்டு உடல்நலம் பற்றி விசாரித்ததுடன், அவரை நீண்ட ஓய்வு எடுக்கும்படியும் வற்புறுத்திக்கேட்டுக் கொண்டார்.

## ராமச்சந்திரன் நம்பிக்கை

சென்னை, மே. 22

எதிர்வரும் சட்டசபைத் தேர்தலில் ஜனதா கட்சி தமிழ்நாட்டில் வெற்றிபெறும் என்று மத்திய அமைச்சர் திரு. பி. ராமச்சந்திரன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் ஜனதா ஆட்சிக்குவந்தால், மக்கள் பிரச்னைகளைத் தீர்க்க எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்றும் தமிழகம் புதுப்பொலிவு பெறும் என்றும் அவர் இங்கு கூறினார்.

## பாரதம் வருமாறு கார்ட்டருக்கு அழைப்பு

புதுடில்லி, மே 22

அமெரிக்கப் பிரதமர் திரு. ஜிம்மிகாட்டரை இந்தியாவுக்கு விஜயம் செய்யுமாறு இந்தியப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் அழைப்பு விடுத்துள்ளார். (இ)

## மொரார்ஜி மீண்டும் தமிழகம் வருவார்

சென்னை, மே 22

தமிழ்நாட்டில் தேர்தல் பிரசாரம்செய்யும்பொருட்டு இந்தியப்பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் மீண்டும் அடுத்த மாதம் 3, 4ம் திகதிகளில் சுற்றுப்பயணமொன்றை மேற்கொள்வார்.

விசேட ஹெலிகொப்டர்விமானம் ஒன்றை ஏற்பாடுசெய்ய கட்சி தீர்மானித்துள்ளது.

போக்குவரத்து அமைச்சர் திரு. ஜோர்ஜ் பெர்னாண்டஸ், ரயில்வே அமைச்சர், திரு மது தந்தவதே, தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு. எல். கே. அட்வாணி, தொழில் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் திரு. ரவீந்திரவர்மா ஆகியோரும் தமிழ்நாட்டில் தேர்தல் பிரசாரம் செய்வார்கள்.




### மணிவாக்கு

துன்புறும் மக்களுடைய ஒருவன், தன்னைப்பற்றிச் சிந்திப்பதில்லை. உண்மையில் அவனுக்கு இதற்கு எப்படி நேரங்கிடைக்கும்.

—காந்திமகான்

ஈழநாடு
THE EELANAADU

# தேசியப் பிரச்னைகளும் அரசியல் பிரச்னைகளும்

'நாடு எதிர்நோக்கும் தேசியப் பிரச்னைகள் வேறு; அரசியல் பிரச்னைகள்வேறு இந்த இரண்டுக்குமிடையேயுள்ள பேதங்களை நாம்கண்டறியவேண்டும். தமது மக்கள் எதிர்காலத்தில் சுபீட்சமாக வாழவேண்டுமானால் கடினஉழைப்பு மிகமிக அவசியம்'.

குடியரசு தினத்தையொட்டி பிரதமர் விடுத்துள்ள செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

அரசியல் சுதந்திரம் மட்டும் போதாதென்றும்பொருளாதார சுதந்திரத்தை அடையவேண்டுமென்றும் தமது செய்தியில் வலியுறுத்தியுள்ள பிரதமர் நெருக்கடிகளைச் சமாளித்து சுபீட்சம் காண்போம் என்னும் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.

நமது நாட்டில் சகல பிரச்னைகளுமே அரசியல் பிரச்னையாக்கப்பட்டு விடுகிறது. அரிசியில்கூட அரசியல் கலந்துவிடுகிறதென்றால் இதர பிரச்னைகளைப்பற்றிச் சொல்லத் தேவையில்லை.

பொதுத்தேர்தல் நெருங்கிக்கொண்டிருக்கும் இச்சமயத்தில் பிரச்னைகள் பல தலைதூக்குமென்பது உண்மை. இதனால்தான் பிரதமர் தேசியப்பிரச்னைகளுக்கும் அரசியல் பிரச்னைகளுக்குமிடையிலுள்ள பேதங்களைக் கண்டறியவேண்டுமென்றுகூறியிருக்கிறார்.

பொருளாதாரத்தில் நாடு சுதந்திரமடைய வேண்டுமானால் கடின உழைப்பு அவசியமென்று பிரதமர் கூறியிருக்கிறார்.

கடினஉழைப்பு மட்டுமல்ல ஒற்றுமையான கடின உழைப்பு அவசியம்.

இந்நாட்டிலொழும் தமிழ் மக்களுக்குப் பிரச்னைகள் உள்ளனவென்பதை இப்போது சகல கட்சிகளும் ஒப்புக்கொண்டுள்ளன.

இவற்றுக்குத் தீர்வுகாண்பதில்தான் அவைகளுக்கிடையில் ஒருமித்த கருத்து ஏற்படவேண்டும்.

தமிழ்மக்களின் பிரச்னைகள் தீர்க்கப்பட்டுவிட்டால் நாடு பொருளாதார சுதந்திரமடைவதில் சிக்கலிருக்க முடியாது.

புதிய அரசியலமைப்பை உருவாக்கிய சமயத்திலேயே தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு நிரந்தரமான தீர்வு காண வழிகண்டிருக்கலாம்.

அரசியல் அமைப்பில் திருத்தஞ்செய்து பிரச்னைக்குத் தீர்வுகாண்பதும் முடியாத காரியமல்ல.

இப்பொழுது தமிழ்மக்கள் தமிழ் ஈழக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இந்தக் கோரிக்கையின் அடிப்படையிலேயே பலகட்சிகளும் சுயேச்சை வேட்பாளர்களும்கூடத் தேர்தலில் போட்டியிட முன்வந்துள்ளனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி இப்பொழுதுத்தேர்தல் தமிழ்ஈழக் கோரிக்கைக்கு சர்வஜன வாக்கெடுப்பாகக் கருதப்படும் என்று தெரிவித்துவருகிறது.

தமிழர் பிரச்னை அரசியல் பிரச்னையல்ல. இது ஒரு தேசியப்பிரச்னை.

தமிழர் பிரச்னை சிறுபான்மையினரின் பிரச்னையல்ல. அது ஒரு தேசிய இனத்தின் பிரச்னை,

பிரதமர் தமது குடியரசு தினச்செய்தியில் குறிப்பிட்டிருப்பதுபோல தேசியப் பிரச்னைக்கும் அரசியல் பிரச்னைக்குமிடையிலுள்ளபேதங்களைக் கண்டுகொண்டால் பிரச்னைகளைச் சுலபமாகத் தீர்த்துக்கொள்ளலாம்; சுபீட்சப் பாதையும் தூரத்திலிருக்காது.

# சேக்கிழான் அடி சென்னி இருத்துவாம்

சேக்கிழார் சைவத்திற்குச் செய்தபணிகள் பல திறத்தன. சைவசமய வரலாற்றிலேயே அவருக்கு ஒப்பானார் ஒருவரும் இலரென்று சாற்றுவது மிகையாகாது. முதலாவதாக எண்ண வேண்டிய தொண்டு, அநபாய சோழனின் அவைக் களத்தில் சீவகனது வரலாற்றுக்கதைக்கு முதலிடம் பெறவொட்டாது உண்மை நாயன்மார்கள் சரிதைகளை விளக்கியது. இல்லையேல் சிவபெருமான அடியெடுத்துக் கொடுக்கப் பாடப்பெற்ற திருத்தொண்டத் தொகையின் பெருமையும், இராசராசசோழனால் பாராட்டப்பட்ட திருத்தொண்டர் திருவந்தாதியின் பெருமையும், விளக்கமடைந்திருக்கமாட்டா. நாயன்மார்களின் சரிதைகளும் செயற்கரிய செய்த பெருந்தொண்டுகளும் மறைந்தோ, குழறுபட்டோபோயிருக்கும். எனவே நாடாண்ட மன்னனை அச்சரிதையில் ஈடுபடுத்தியதும், அரசியல் உதவிகொண்டுசமயத்தை வளர்த்ததும், தலையாய தொண்டு இரண்டாவது, சேக்கிழார் நாயன்மார்கள் சரிதைகளைத் திருவருள் வழிகொண்டு தம் அளவிலா உழைப்பினாலும் அன்பினாலும் உருவாக்கியது ஒரு தெய்வீகச் செயலாகும். எந்நாட்டு வரலாற்றிலும் சுமார் ஆயிரம் ஆண்டுகளில் பற்பலகாலங்களில் வாழ்ந்த அடியார்களின் வரலாற்றை உள்ளபடி, உணர்ந்தபடி இறைவன் உணர்த்தியபடி எழுதிய வேறு ஆராய்ச்சியாளரைக் காண்கிலோம். ஆராய்ச்சிமட்டுமல்லாமல், அச்சரிதைகளை ஒரு பெரும் காப்பியமாக உயர்ந்த சிவக்கவிதையாக்கியது ஒரு பெரிய தொண்டாகும. சைவத்தின் குலக்கவிஞராகிய சேக்கிழாருக்கு மேலாக ஒருவரையும் சொல்லல் இயலாது. மூன்றாவது, சேக்கிழார் சைவசித்தாந்த உண்மைகளைத் தெளிவுபடப் பெரிய புராணத்தில் உணர்த்தியது. இதுமுன்னிரண்டையும் விட மிகச் சிறந்த தொண்டு. இப்பொருளைப் பற்றி ஈண்டுச்சிறிது சிந்திப்பாம்.

[இன்று யாழ்ப்பாணத்தில் சேக்கிழார் விழாகொண்டாடப்படுகிறது. இக்கட்டுரை திரு. நல். முருகேச முதலியார் எழுதியகட்டுரையிலிருந்து தொகுக்கப் பெற்றது.]

சேக்கிழார் காலம் சைவசித்தாந்த ஞானசூரியனை மெய்கண்டாரின் காலத்துக்குசுமார் எழுபது ஆண்டுகள் முந்தியது. ஆனால்இராமாநுசர், மத்துவர், பராசரர், பசவேசுவரர்முதலியவர்களுக்குச் சிறிது பின்னே சிறிது சமமாகவோ இருக்கும். அடியார்க்கு நல்லார் போன்ற இலக்கிய ஆசிரியர்கள்காலமும் ஏறக்குறைய அதுவே. இந்தச் சூழ்நிலையில் தமிழ்மறையாகிய தேவாரத்திருமுறைகள் இருந்தபோதிலும் ஞானமிர்தம் முதலிய சைவசித்தாந்த சாத்திரநூல்கள்இருந்தபோதிலும், சித்தாந்தத்தின் முப்பொருள் உண்மைகளைத் தத்துவ நூலாக மட்டும் இயற்றாமல், அநுபவம் சான்ற உண்மை அடியார்களின் சரிதைகள் வாயிலாகவும் அவர்கள் திருவாய் மலர்ந்த தெய்வீகப்பாடல்கள் மூலமாகவும் விளக்குவது அவசியமாயிற்று. முதலில் சமயத்தை வலுப்படுத்தித்தான் சமயக்கோட்பாடுகளை நிலைநாட்டவேண்டும். சேக்கிழார் பெருமான் தேவாரப்பாடல்களின் உண்மைப்பொருள்களைப் பெரிய புராணத்தில் ஆங்காங்கே எடுத்தோதி இறைவனின் பஞ்சகிருத்திய அருட்டிறத்தினை அடியார்கள் சரிதையில் விளக்கிக் காட்டவில்லையேல், வேதாகமங்களின் ஞானசாரமான சைவசித்தாந்தம் ''இராசாங்கத்தில்' அமர்ந்திருக்க முடியாது. எனவே சேக்கிழார் மெய்கண்டதேவநாயனார் பின்னர் அருளிய சிவஞானபோதகம் என்ற பெருஞ்சாத்திரத்திற்கு அடிகோலினார் என்பது உண்மை

இந்த உண்மையை விளக்கிப்பெரியபுராணத்தில் எடுத்த இடமெல்லாம் சான்று காட்டுவது எளிது. அவைகளைஎல்லாம் விடத் தலைசிறந்தது சேக்கிழார் திருப்பாசுரத்திற்குத் தந்துள்ள விளக்கமேயாகும். இப்பாடல்களைச் சித்தாந்த சாஸ்திரம் பதின்நான்கிற்கு ஒப்பாகவும் ஒருமுறையில் உயர்வாகவும் கொள்ளலாம். திருஞானசம்பந்தரதுதிருப்பாசுரத்தைச் சிவாகமங்களின் ஞானபாத முடிவாய்ச் சிவஞானபோதத்துள் வடித்துக்காட்டப்படும் பன்னிரண்டு சூத்திரங்களின் மூலபாடமாக உணரலாம். முதன் மூன்று பாட்டுக்களின் பொது வகையிலும் பின்பாட்டுக்கள் சிறப்பு வகையிலும் அமைந்துள்ளன. இவைகளுக்குச் சேக்கிழார்பெருமான இருபத்திரண்டு பாட்டுக்களில் மெய்ப்பொருள் முடிவுகாட்டும் வகையில் பேருரை அருளியுள்ளார்.

சேக்கிழார் திருப்பாசுரத்துக்கு உரை அருளியதன் பெருமையைச் சபாணிட்பருவம் ஒன்பதாம் பாட்டால் மகாவித்துவான் வெகு அற்புதமாகப் பாராட்டியுள்ளார். சேக்கிழார் நூலாசிரியராகவும் உரையாசிரியராகவும் போதனாசிரியராகவும், ஞானாசிரியராகவும் திகழ்கின்றார் என்றார் மகாவித்துவான்.

'தூக்கு சீர்த்திருத்
தொண்டத் தொகைவிரி
வாக்கிறைச்சொல்ல
வல்லபிரான் எங்கள்
பாக்கியப்பய னப்பதி
குன்றைவாள்
சேக்கிழான் அடி சென்னி
இருத்துவாம்'

—சிவஞானசுவாமிகள்.

(அ)

## 'கலைகள்மூலம் கலாச்சாரம் வளருகிறது'

அரியாலை, ஞாயிறு

'தமிழ்மக்கள்பாரம்பரியமாக தமது கலைகளை நன்கு பேணி வளர்த்துவருகிறார்கள். இக்கலைகளில் காட்டியகலையே மிக முக்கிய இடத்தைப் பெறுகிறது. நாட்டியக்கலை இறைவணக்கத்துடன் தொடர்புடையதாகையால், என்றும் அழியாதுதமிழ்மக்களின்பாரம்பரிய கலையாக விளங்கிவரும் நாட்டியக்கலையை வட இலங்கையில் சதங்கை நர்த்தனலயமும், இன்னும் பல நாட்டிய மன்றங்களும் பேணி வளர்த்து வருவதை நான் மனதாரப் பாராட்டுகிறேன். இம்மன்றங்கள் இம்முயற்சியில் மேலும் வளர நாம் போதிய ஆக்கமும் ஊக்கமும் அளிக்கவேண்டும்'.

இவ்வாறு இலங்கைப் பல்கலைக்கழக யாழ். வளாக புவியியல் போாசிரியர் கலாநிதி ஹூதர் ஜெயசிங்கம், யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற செல்வி நொயலீன் ஷாமினிசௌந்தரநாயகத்தின் நாட்டிய அரங்கேற்றத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், 'தமிழ்மக்கள்பரதநாட்டியத்தை வளர்ப்பதற்கு சமீபகாலத்தில் பெருமுயற்சிசெய்து வருகிறார்கள். இலங்கை அரசாங்கமும் கலைகளை வளர்ப்பதற்கு யாழ்.வளாகத்தின் ஒரு பிரிவாக இராமநாதன் அக்கடமியை நிறுவி பலவித கலைகளையும் வளர்த்துவருகிறது. கலைகள் வளர்ச்சியடைவதன் மூலம் நமது பண்பாடும் கலாச்சாரமும் வளர்ச்சியடையும். இவைகளின்வளர்ச்சிக்கு உதவ நாம் ஒவ்வொருவரும் முயற்சி செய்யவேண்டும்' என்று குறிப்பிட்டார்.

திருமதி சவுந்தரநாயகம் தமது உரையில், நட்டுவாங்கம் செய்த சதங்கை நர்த்தனலய ஆசிரியை திருமதி லீலா ஆறுமுகையாவுக்கும் ஏனையோருக்கும் நன்றிதெரிவித்தார்.

## 'கூட்டுறவுத்துறையில்மகளிர் பங்கு முக்கியமாகும்'

சங்கானை, ஞாயிறு

"கூட்டுறவுத் துறையல மகளிர் பங்கு முக்கியமானதாகும். இதனால் வீடுகள் சிறப்பதுடன் நாடும் சிறக்க ஏதுவாகும். பள்ளிப் படிப்புடன் மட்டும் பெண்கள் நில்லாது கற்றகல்வியை பொது சேவைகள், சமூகசேவை கூட்டுறவுத்துறை போன்றவற்றிற்குப்பயன்படுத்த முன்வருவது சாலச்சிறந்ததாகும்.''

இவ்வாறு தேசியமகளிர் கூட்டுறவுச்சபை உபதலைவி திருமதி கந்தையா, சங்கானை ப. நோ. கூ. சங்க கூட்டுறவு மகளிர்குழு அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் உரையாற்றுகையில், ''கூட்டுறவில் மகளிர் பங்கு கொண்டால் மட்டும் போதும் என்ற கருத்துடன் நின்றுவிடாமல் இதனைக் கிளைகள்மூலம் அங்கத்துவப்படுத்தி அன்நிலையில் வேலைவாய்ப்பிற்கும் இடமளிப்பது இம்மகளிர் குழுக்களின் முக்கிய நோக்கமாகும் என்றார்.

மின்தறி ஆலை செப்பனிடும் பகுதியில் நிகழ்ந்த இவ்வைபவத்தில் நெறியாளர்குழு உறுப்பினர் திரு. பொ. சிவகுரு, கைத்தொழில் முகாமையாளர் திரு. எஸ். கே. திருச்சிற்றம்பலம், நுகர்ச்சி முகாமையாளர் திரு சுப்பிரமணியம் ஆகியோர் பங்குபற்றினர். (க)

## கட்டுப்பணத்தை இளைஞர் செலுத்துவர்

வவுனியா, ஞாயிறு

வவுனியாத் தொகுதியில், தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் திரு. தா. சிவசிதம்பரத்தின் கட்டுப்பணத்தை நெடுங்கேணி தமிழ் இளைஞர் பேரவையினர் செலுத்த முன்வந்துள்ளனர். இதேபோல, முல்லைத்தீவு வேட்பாளர் திரு. சே. மா. செல்லத்தம்புவின் கட்டுப்பணத்தைச் செலுத்துவதற்கு பல கிராமங்களிலிருந்தும் இளைஞர்கள் முன்வந்துள்ளார்.

## ஜப்பானிய உதவியுடன் வலைத் தொழிற்சாலை

கொழும்பு, ஞாயிறு

இலங்கையில் ஜப்பானிய உதவியுடன் ஒரு கோடியே தொண்ணூறு லட்சம் லாடர் செலவில் பெரிய வலைத் தொழிற்சாலை ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

இத் தொழிற்சாலைக்கான ஆரம்ப முயற்சிகள் முடிந்துவிட்டதாக பெற்றோலிய கூட்டுத்தாபனத் தலைவர் திரு. ஈ. ஆர். எஸ். ஆர் குமாரசாமி தெரிவித்தார்.

இதற்கான ஜப்பானிய குழுவொன்று ஏற்கனவே இலங்கை வந்துஆராய்ச்சியைமேற்கொண்டது. அக்குழுவின் முடிவிற்கமைய வேறொரு குழுவொன்றும் மீண்டும் இலங்கை வரவுள்ளது.

இத் தொழிற்சாலையில் பலருக்கு வேலைவாய்ப்பளிக்கவும், வலை உற்பத்தி செய்தல், நைலோன் நூல் உற்பத்தி செய்ய முடியும் என்றும் அவர் கூறினார். (கெ)

## இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். பல்தொழில் நுட்ப நிறுவனத்தின் கட்டிட அமைப்பு விரிவுரையாளராகக் கடமையாற்றிய திரு. ஆறுமுகம் இடமாற்றம் பெற்று மட்டக்களப்பு சம்மாந்துறைப் பல்தொழில்நுட்பநிறுவனத்திற்கு செல்வதையிட்டு யாழ். பல்தொழில் நுட்ப நிறுவன கட்டிட அமைப்பு பகல்நேர மாணவர்கள் தேநீர் விருந்தளித்தும், சகல விரிவுரையாளர்கள் இராப்போசனவிருந்தளித்தும் கௌரவித்தனர்.

## கருணாநிதியின் கட்டுப்பணம்

சென்னை மே, 22

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சரும், தி. மு. க. கழக தலைவருமான. கருணாநிதிக்கான கட்டுப்பணத்தை, மத்திய பிரதேச மானில பாரத் ஹெவிஎலெக்ரிகல் தொழிற்சாலை ஊழியர்கள் தலைவர் ? முத்துக்கிருஷ்ணன். கட்டினார்.

## புதிய நிர்வாகசபை

அரியாலை, ஞாயிறு

யாழ்ப்பாணக் கிறிஸ்த சமரட்சண சங்கத்தின் 86 வது வருடாந்தக் கூட்டத்தில் புதிய வருட நிர்வாகிகளாக தலைவர் திரு. எஸ். ரி. ஆசீர்வாதம், செயலாளர்: திரு. எம். பி. சிவானந்தம், பொருளாளர்: திரு. யே. சி. செல்வராசா ஆகியோரும் ஒன்பது நிர்வாகசபை உறுப்பினரும் ஏகமனதாகத் தெரிவு [செய்யப்பட்டனர்.

# ஜெயக்கொடி 'சிவா' தியாகம் வீண்போகக்கூடாது

அன்று ஈழம் முழுவதும் நூறு வீதமாக வாழ்ந்த தமிழினம் இன்று இருபத்திரண்டு வீத தமிழராக அல்ல, தமிழ் பேசுவோராகக் குறுகியிருப்பதற்குக் காரணம் என்ன? அன்று நூறு வீத இந்துக்கள் வாழ்ந்த இப்பூமியில் இன்று பதினேழு வீதமே இந்துக்கள் வாழக் காரணம் என்ன? ஒரு வார்த்தையில் சொல்வதானால் அதற்குரிய காரணம் சாதியே.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் இங்கு வாழ்ந்த தமிழர்களில் பலர் பௌத்தர்களாக மாறினர். அதன் பின்வந்த இஸ்லாம் மதத்தின் சகோதரத்தால் பல்லாயிரக்கணக்கான தமிழர் இஸ்லாமியத்தைத் தழுவினர். அதன்பின் வந்த மேல்நாட்டு பாதிரிகளின் மூலம் பல்லாயிரவர் கிறித்துவராயினர்; இது தமிழினம் அழிந்த பழைய கதை.

இன்றும் ஐம்பதாயிரம் தமிழர் பௌத்தராயினர் என்னும் செய்தியைக் கேள்விப்பட்டோம். இங்ஙனம் இந்த நாட்டில் தமிழினம், சிறுபான்மை இனமாக அழிந்து போவதைக் கண்டும் அதற்குரிய காரணங்களுள் ஒன்று சாதிப்பிரச்னை என்பதை உணர்ந்தும் தமிழினம் தன் தவறினை உணரவில்லை.

உணர்ந்திருந்தால் வரும் பொதுத்தேர்தலில் உடுப்பிட்டித் தொகுதியில் ஒரு வேட்பாளராக நிற்கும் திரு. இராசலிங்கத்தோடு போட்டியிட எவரும் முன்வந்திரார். தேர்தல் என்றால் போட்டியிருப்பது இயற்கைதான். அது ஜனநாயக மரபும் கூட. ஆனால் திரு. இராசலிங்கத்தோடு போட்டியிடுவது குறிப்பிட்ட ஒரு கட்சியோடு அக்கட்சியின் கொள்கையோடு போட்டியிடுவதல்ல. அது சிறுபான்மை தமிழினத்தோடு போட்டியிடுவதாகும். ஏனெனில் அவர் சிறுபான்மைத் தமிழரின் வேட்பாளர். தமிழினத்தால் பல்லாயிரமாண்டுகளாக உரிமை மறுக்கப்பட்டுப் பல வித அல்லல்களைத் தாங்கி, நொந்து நொடித்துப்போன தமிழினத்தின் வேட்பாளர்.

திரு. இராசலிங்கம் தமிழர் விடுதலைக்கூட்டணியின் வேட்பாளர் என்பது உண்மை. வடுவாகும். அதனை அடியோடு அவரை ஒரு வேட்பாளராக நிறுத்தத் தார்மீக நேர்மையைக் கூட்டணி உயர்த்திக் கொண்டுள்ளது உண்மை. இதனால் அக்கட்சி அடைந்துள்ள கிராமங்கள் பல. உடுப்பிட்டியில் ஜெயக்கொடி நாட்டிய திரு. ஜெயக்கொடியும், உடுப்பிட்டி சிங்கம், என்ற அன்புப் பெயர் பெற்ற திரு. சிவசிதம்பரமும் அந்தத் தொகுதியைத் தியாகம்செய்து சிறுபான்மைத் தமிழருக்குத் தொண்டு செய்துள்ளன.

என்பவர் தேர்தலுக்கு நிற்கிறார். அவர்கொள்கை இன்னது அவர் இத்தகையர் என்னும் அளவில்நில்லாது இன்ன சாதியினர் என எண்ணும் அளவுக்குப் பேர்சு வளர்ந்திருப்பது நமது அநாகரிகத்தையே காட்டுகிறது.

### காந்தியடிகள் விரும்பவில்லை

காந்தியடிகள் தாழ்த்தப்பட்டோர்க்குத்தனித் தொகுதி ஒதுக்குவதை வெறுத்தார்.

— வித்துவான் க. ந. வேலன் —

இந்தத் தியாகம் வீண் போகாதிருக்க வேண்டுமானால் இத்தனை ஆண்டுகளாகத் தமிழரில் ஒரு பிரிவினருக்கு இழைத்த தீங்குகளுக்குக் கழுவாய் தேடவேண்டுமானால் அவரைப் போட்டியின்றி அனுப்பவேண்டும். திரு. இராசலிங்கம் கல்விமான், பண்பாளர், தன்முயற்சியால்–தன்னாற்றலால் உயர்ந்தவர். அந்தத் தொகுதியின் வேட்பாளராகநிற்க எல்லாத் தகுதியும் வாய்ந்தவர் சாதியின் அடிப்படையில். திரு இராசலிங்கம் தோற்றால் அது வெறுமனே தமிழர் விடுதலைக் கூட்டணியின் தோல்வியல்ல தமிழினத்தின் தோல்வியாகும்.

### முதல் தடவை

இந்நாட்டுத் தேர்தல் வரலாற்றிலேயே சிறுபான்மைத் தமிழர் ஒருவர் வேட்பாளராக நிற்பது இதுவே முதன் முறையாகும். இதற்குமுன் தமிழரசுக்கட்சி ஒருவரை மேல்சபைக்கு நியமித்துள்ளது. இன்றைய அரசு மற்றொருவரை மக்கள் சபையில் விற்றிருக்கச் செய்துள்ளது இவையெல்லாம் அவர்களின்தேவையை நிறைவு செய்யாவிட்டாலும் மனப் புண்ணைச் சிறிதளவாவது ஆற்றக்கூடிய செயல்களே.

### சி. பா. தமிழர் என்ற பதம்

சிறுபான்மைத் தமிழர் என்ற உணர்வு இருப்பதே ஒரு ஒடுக்கவேண்டிய , நேரத்தில் அதனை வளர்ப்பது போலத் தேர்தலை நடத்துவது விவேகமாகாது. திரு. இராசலிங்கம் அதனால் சாதிப்பிரிவு நிரந்தரப் பிரிவாயமைந்துவிடும் என அஞ்சினர். அதுபோலவே இங்கும் சிறுபான்மைத் தமிழருக்கு ஒரு தொகுதி என அமைப்பது ஒரு தவறு. அதைவிடத் தவறு அங்கு போட்டி ஏற்படுவது. இது காந்தியடிகள் கருதுவது போலச் சாதிப்பிரிவை வற்புறுத்தும் செயலாக அமையும் போட்டியினால் அப்பிரிவும் பகையும் பூசலும் மேலும்வளர ஏதுவாகும்.

திரு. இராசலிங்கத்தை எதிர்த்துப் போட்டியிட முன் வருவோர் இராசலிங்கம் என்ற தனிமனிதனையோ, தமிழரையோ எதிர்த்துப் போட்டியிட முன்வரவில்லை என்பதும் அவர்கள் எதிர்ப்பதெல்லாம் த. வி. கூட்டணியினரின் அரசியற் கொள்கைகளையே என்பதும் உண்மையே. ஆனால் திரு. இராசலிங்கத்தின் வெற்றியை சாதிப்பிரிவினையின் தோல்வியாகவே கொள்ள வேண்டும். எனவே திரு. இராசலிங்கத்தைப் போட்டியின்றி யனுப்புவதே உடுப்பிட்டித் தொகுதி வாக்காளர் இன்று தமிழினத்துக்குச் செய்யும் தொண்டாகும். இதனை ஆற்றும் பேறு மற்றத் தொகுதியினருக்குக் கிடைக்கவில்லை. இந்த அரியவாய்ப்பைப் பாரம்பரிய கலாசாரமும் கல்வியறிவும் விடாமுயற்சியும் விவேகமுமுடைய உடுப்பிட்டித்தொகுதி மக்கள் வெற்றிகரமாகப் பயன்படுத்துவார்கள் என நம்புவோம். [அ]

## வேலரும் மயிலரும்



வேலர்: வாழ்க்கையில் நானொரு ஏமாந்தபேர்வழி.
மயிலர்: ஏன்?
வேலர்: சீட்டுப்போட்டன் சீட்டுக்காரன் ஆள் மாறீட்டான்; வாக்குச் சீட்டுப்போட்டன் அபேட்சகன் கட்சிமாறீட்டான்.

—சுந்தர்

# "ஆசிரிய சமூகத்தின் முன்னோடி",

அரியாலை, ஞாயிறு

ஆசிரியத் தொழிலை ஊதியம் தரும் தொழிலாகக் கொள்ளாது சேவியத்திற்கு வழி காட்டும் தொழிலாளராகக் கொண்டு, நல்லூர் ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் சுமார் 18 ஆண்டுகள் பணிபுரிந்து நாட்டுக்கு நல்லாசிரியர்களை பயிற்சிபெறச்செய்த நல்லாசிரியனைத் திகழ்த்த அமரர் ஞானசுந்தரம் – தம்பையாவின் மறைவு, ஆசிரியஉலகிற்கு ஈடு செய்ய முடியாத பெரு நஷ்டமாகும்.

இவ்வாறு நல்லூர் ஆசிரிய பயிற்சிக் கலாபாடசாலையின் இளைப்பாறிய அதிபர் திரு, ஜே. ஜி. அரசரத்தினம் காலஞ்சென்ற ஞானசுந்தரம் தம்பையாவின் இறுதி ஆராதனையின் போது அஞ்சலி செலுத்திப் பேசுகையில் குறிப்பிட்டார்

இறுதி ஆராதனையை வணக்கத்துக்குரிய அதிபர் யே. யே. ஞானப்பிரகாசமும் வணக்கத்துக்குரிய யே. சர்வானந்தமும், வணக்கத்துக்குரிய சாம். அல்பிரட்டும் கூட்டாக நடத்தினர்.

திரு அரசரத்தினம் தொடர்ந்து பேசுகையில் எல்லோரையும் நேசிக்கும் பண்பாளராக விளங்கிய அவர். எல்லோரோடும் சிறந்தமுறையில் பழகுவார். எதையும் தாங்கும் இதயங்கொண்ட இவர் எந்த நேரத்திலும் எல்லோருக்கும் உதவும் தன்மையுடையவராக இருந்தார். இவரிடம் சிறந்தமுறையில் பயிற்சி பெற்ற ஆயிரக்கணக்கான ஆசிரியர்களாகப் பணிபுரிந்து வருகிறார்கள். இவரை ஆசிரிய சமூகத்தில் முன்னோடி என்று கூறினார் மிகை யாகாது என்று குறிப்பிட்டார்.

குமாரசுவாமி

# போட்டியிடுவது பற்றி நாளை முடிவு தெரியும்

யாழ்ப்பாணம் திங்

சாவகச்சேரி தொகுதியில் முன்னாள் எம்பி, திரு வி. குமாரசுவாமி போட்டியிடுவது பற்றி நாளை முடிவு செய்யப் படவிருக்கிறது.

சாவகச்சேரி 'சரஸ்வதி பூங்காவில்' நாளை மாலை 4மணிக்கு நடைபெறும் ஆலோசனைக் கூட்டமொன்றில. இது பற்றி முடிவு எடுக்கப்படும், இக்கூட்டத்திற்கு திரு. வி. குமாரசுவாமி தமது ஆதரவாளர்களை அழைத்துள்ளார்கள்.

சாவகச்சேரி தொகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் முன்னாள் எம் பி. திரு. வி. என். நவரத்தினம் போட்டியிடுகின்றார், திரு. வி. என். நவரத்தினத்திற்கு ஆதரவாக தமிழ் இளைஞர் பேரவையினர் தேர்தலில் பிர

(7-ம் பக்கம் பார்க்க)

## அஞ்சலிக் கூட்டங்கள்

வவனியா, ஞாயிறு

மூதறிஞர் செல்வா மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் வவனியா தமிழ் பேரவையின் ஆதரவில் 23-ந் திகதி பெரிய, தம்பனையிலும் 24-ம் திகதி வாரிக்குட்டியூரிலும், செட்டிகுளத்திலும் 25-ந் திகதி நெடுங்கேணியிலும் அஞ்சலிக் கூட்டங்கள் நடைபெறும். இக் கூட்டங்களில் வண்ணை ஆனந்தன், பொன் மதிமுகராசா, பீற்றர் பொன் கலன்ட், அரசாங்க எழுதுவினைஞர் சங்கப் பிரதிநிதி திரு. டேவிட், தமிழர் விடுதலைக் கூட்டணி வவனியா வேட்பாளர் திரு. தா. சிவசிதம்பரம், செச்சா செல்வராசா உட்பட பலர் உரையாற்றுவார்கள்.

## வன்முறைகளை ஆட்சேபித்துதந்தி

யாழ்ப்பாணம், திங்கள்

காங்கேசன்துறை பகுதியில் பொலிசாரினால் நடாத்தப்பட்ட தாக்குதல்களையும் இனந்தெரியாதவர்களால் புஸ்பராஜாவின் வீட்டுவேலி தீக்கிரையாக்கப்பட்டதும் குறித்து உடன் நடவடிக்கை எடுக்குமாறு ஐ ஜி. பி. யாழ் பிரதேச பொலிஸ் அத்தியட்சகருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி செயல் அதிபர் திரு. ஏ. அமிர்தலிங்கம் தந்தி அனுப்பியுள்ளார். (கெ)

# 'உத்தியோக மோகத்தில் இன்னும் ஆழ்ந்திருக்கின்றனர்'

## இளைஞர்கள் பற்றி உதவி அரசாங்க அதிபர்

யாழ்ப்பாணம், திங்கள்

"எனது கோப்பாய்ப் பிரிவிலேபனந் தொழில் சம்பந்தமான பண்ணை ஒன்றினை ஆரம்பித்து இளைஞர்களுக்குத் தொழில் வாய்ப்பளிக்க முன் வந்த பொழுதுபலஇளைஞர்கள் அந்தத் தொழிலில் ஈடுபட உற்சாகம் காட்டவில்லை. அவர்களை விசாரித்துப் பார்த்ததில் அவர்கள்இன்னமும் உத்தியோக மோகத்தில்தான் ஆழ்ந்து கிடப்பது தெரியவந்தது. நான் இது தவறான மனப்பான்மை என்று சுட்டிக்காட்டினால் இவர் உத்தியோகத்தில் இருந்துகொண்டு எமக்கு வேறு வழிகாட்டுகிறாரே என்று அவர்கள் தப்பபிப்பிராயம்கொள்ள வாய்ப்புஉண்டாகின்றது இந்த மனப்பான்மை நிச்சயம் மாற வேண்டும். அன்றுதான் எமது பரம்பரைக்கு விமோசனமுண்டாகும்".

இவ்வாறு கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரிய கலாசாலையில் நிகழ்ந்த 'ஜனதா' சமுதாய இணைபுக் கல்வித்திட்டத் தொடக்க விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. கா மாணிக்க வாசகர் தமதுஉரையில் இவ் குறிப்பிட்டார். விழாவிற்கு கலாசாலை அதிபர் திருமதி இ. ஆனந்தக்குமாரசாமி தலைமைதாங்கினார். திரு. கா. மாணிக்கவாசகர் மேலும் கூறியதாவது:-

"பாடசாலைகளிலே கல்வி கற்று பொதுப் பரீட்சைகளுக்குத் தோற்றியபின் சித்தி அடையாத நிலையில் வருந்திக் கொண்டிருக்கும் இளைஞர்களுக்கு ஜனதா–சமுதாய இணைப்புக் கல்வித்திட்டம் ஒரு வரப்பிரசாதமாகும். கோப்பாய் இளைஞர்கள் இதனை நன்கு பயன்படுத்தி முன்னேற வேண்டும்".

தலைமை தாங்கிய கலாசாலை அதிபர், "இத் திட்டத்தின் மூலம் கோப்பாய்க் கிராமத்தோடு எமது கலாசாலையின் தொடர்பு மேலும் அதிகரிப்பதோடு எமது கல்விப் பணியினை விரிவடையச் செய்து அதனால் இங்குள்ள இளைஞர்க்கு உதவுவதற்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளமையையிட்டுமகிழ்கின்றேன். சித்திரம் இசை, ஆங்கிலத்திலேயேஉரையாடற் பயிற்சி, நடனம், கலை - கைப்பணி மனையியல், ஆகியபாடங்களில் அடுத்தமாதம் 6-ம்திகதி திங்கட்கிழமை தொடக்கம் மாணவ மாணவிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படும்" என்றார்.

கோப்பாய் - ஆசிரிய கலாசாலை, 'ஜனதா' சமுதாய இணைப்புக் கல்வித் திட்டச் செயலாளர் திரு. க. சொக்கலிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினார். இசைத்துறை விரிவுரையாளர் திரு. பொன். தெய்வேந்திரம் யாவர்க்கும் நன்றி தெரிவித்துப் பேசினார்.

கலாசாலையின் கவின்கலைப் பிரிவு மாணவர்களின் இசை, நடன நிகழ்ச்சிகள் சகலரதும் பாராட்டிற்கு உள்ளாயின. (அ)

# "எமது கொள்கைக் கப்பலை தேர்தல் பாறை தகர்த்துவிடாது!"

## 'செல்வா' இரங்கற் கூட்டத்தில் அமிர்தலிங்கம்

யாழ்ப்பாணம், சனி

"தேர்தல் பாறை எமது கொள்கைக் கப்பலைத் தகர்த்துவிட நாம் இடம்கொடோம். எத்தனை இடர்கள் வந்தாலும் எம் இலட்சியத்தை ஈடேற்றியே தீருவோம்"

இவ்வாறு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானத்தில் வண்ணை ஆனந்தன் தலைமையில் நடைபெற்ற மூதறிஞர் செல்வா இரங்கற் கூட்டத்தில் உரையாற்றிய தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார்.

அவர் தொடர்ந்து தமது உரையில், "தாம் கொண்ட இலட்சியத்தை மறவாத கொள்கை வீரர் தந்தை செல்வா. அவர் அன்று சொன்ன தனித் தமிழ் ஈழக் கொள்கை இன்று நிறைவேறுகின்ற நிலையை அடைந்துள்ளது. அவர் எந்த இலட்சியத்திற்காக உழைத்தாரென்பதை அவரது வரலாற்றைத் திருப்பிப் பார்ப்பவர்கள் புரிந்துகொள்வார்கள். இந்த நாட்டிலே வெள்ளையரின் ஆட்சி விடுபடுகின்றபோது சோல்பரி ஆணைக்குழுவின் சிபார்சை மறைந்த சட்டமேதை ஜி. ஜி. எதிர்த்தார். இன்று, மறைந்த ஜி.ஜி பொன்னம்பலமே தமிழ் ஈழக் கொள்கையை ஏற்றுக்கொண்டார். இன்றும் சிலர் ஜி. ஜி. தனிநாட்டுக் கொள்கையை ஏற்றுக்கொண்டாரா என்று வினா எழுப்புகிறார்கள். இந்த நாட்டின் சட்டத்தை எதிர்த்து நானும் எனது நண்பர்களும் துண்டுப் பிரசுரம் விநியோகித்துக் கைதுசெய்யப்பட்டு எதிரிகளாகக் கூண்டில் நின்றபோது அவர் எமக்காக வாதாடுகையில் 'இந்தியாவில் முஸ்லீம் மக்களின் கோரிக்கை தனிநாட்டைத் தந்தது. அதேபோன்று தமிழ்மக்களின் ஏகோபித்த முடிவான தமிழ் ஈழக் கொள்கையை எவராலும் மாற்றமுடியாது' என்றார். விடுதலைக் கூட்டணி ஒரு தேர்தல் பிரசாரக் கூட்டமல்ல. தந்தையின் இலட்சியத்திற்காக எமது உயிரைத் தியாகஞ்செய்தாவது தமிழ் ஈழம் காண்போம். இதை அவரது ஆத்மாவிற்கு ஆணையிட்டுக் கூறுகின்றேன்" எனக் கூறினார்.

சட்டத்தரணி ஆர். விசுவநாதன் பேசும்போது "தந்தை செல்வநாயகம் பல கோணங்களில் பிரிந்து நின்ற தமிழரை ஒற்றுமைப்படுத்தியவர். எனவே அவர் கட்டிக்காத்த ஒற்றுமையைச் சிதறவிடக்கூடாது. சிலர் எமது ஒற்றுமையைக் குலைப்பதற்காகத் தேர்தலின்போது எடுக்கும் முயற்சிக்கு இடமளிக்கக்கூடாது" என்றார்.

நல்லை ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ பரமாசாரிய சுவாமிகள் பேசுகையில் "சாதி மத பேதமின்றி இந்நாட்டு மக்களுக்கு அவர் செய்த சேவையினால் எல்லோராலும் போற்றப்படுகின்றார். அவரைப் போன்ற ஒரு தலைவரை இனி நாம் இவ்வுலகில் காண்பதரிது. அரசியல்துறையிலுஞ்சரி சட்டத்துறையிலுஞ்சரி அவர் தமக்கென்று ஒரு இடத்தைப் பிடித்துத் தலைசிறந்த ஒருவராக விளங்கினார். நான் சிறு பராயத்தில் பள்ளி மாணவனாக இருந்தபோதே அவரது திறமையையும் நேர்மையையும் நன்குணர்ந்தவன்" என்றார்.

அருட்திரு ஜெயசீலன் அடிகளார் பேசுகையில் "அவருடன் நான் பேசியது கிடையாது. நேரில் சந்தித்தது கிடையாது. ஆனால் அவரின் திறமைகளை அறிந்திருக்கிறேன். பல எதிர்புக்கள் மத்தியிலும் எது வந்தாலுஞ்சரி என்று துணிவுடன் நம்மினத்தின் உரிமைகளை மற்றவர்களுக்கு எடுத்துக்கூறினார். பலகோணங்களில் பிரிந்துநின்ற தமிழ் இனத்தை ஒன்றுபடுத்திய அவர் தமிழினத்தின் விடுதலைக்காகக் காந்நீய வழியில் நின்று போராடினார்" என்றார்.

மண்கும்பான் பள்ளிவாசல் தர்மகர்த்தா பேசுகையில், "கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா? மனிதர்களெல்லாம் சிறந்த மனிதர்களாகிவிடமுடியுமா? அந்த வகையில் சிறந்த மனிதனாகத் தந்தை செல்வா விளங்கினார். அவர் ஏற்றிவைத்த மணிவிளக்கு, என்றும் அணையாமல் இருக்கவேண்டும். நாம் எல்லோரும் ஒற்றுமையாக இருந்து, அவர் விட்டுச்சென்றபணியைத் தொடர்ந்து நமது விடுதலைக்காகப் பாடுபடுவோம்" என்றார். (கா-கு)

---

தமிழர் விடுதலைக் கூட்டணி

## தேர்தல் விஞ்ஞாபனம் 28-ம் திகதி வெளியாகும்

யாழ்ப்பாணம், திங்கள்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனம் இம்மாதம் 28ந் திகதி நடைபெறும் நடவடிக்கைக்குழுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டு அன்று மாலை முற்றவெளியில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் வைத்து வெளியிடப்படுமென செயலதிபர் திரு. ஏ. அமிர்தலிங்கம் கூறினார்.

அன்று சகல விடுதலைக் கூட்டணியின் அபேட்சகர்கள், நியமனப் பத்திரங்களை கட்சிக்குச் சமர்ப்பித்த பின்னர், தந்தை செல்வா நினைவாலயத்தில் வைத்து சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொள்வர்.

பொதுக்கூட்டத்தில் வடக்கு கிழக்கு, மலையக விடுதலைக்கூட்டணி அபேட்சகர்கள் உரையாற்றுவார்கள். (கெ)

## 600 கைதிகள் விடுதலை

கொழும்பு, ஞாயிறு

குடியரசு தினத்தை முன்னிட்டு சுமார் 600 சிறைக் கைதிகளுக்கு மன்னிப்புவழங்கி அவர்களை விடுதலை செய்ய ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

வேறு சில கைதிகளுக்கு தண்டனை குறைக்கப்படும் என்று சிறைச்சாலை ஆணையாளர் திரு ஜே. பி. தெல்கொட தெரிவித்தார். (இ)

---

## வரவேற்புபசாரத்தை மறுத்த செல்வகுமார்

கொழும்பு, ஞாயிறு

துரையப்பா கொலைதொடர்பாக கைதுசெய்யப்பட்டு அண்மையில் விடுதலையான செல்வகுமாருக்கு கொழும்பில் நடத்தப்படவிருந்த வரவேற்புபசாரத்தை அவர் ஏற்கமறுத்துள்ளார்.

கொழும்பிலுள்ள தமிழ் மாணவர்கள் பலர் கிறீன் லண்ட்ஸ்ஹோட்டலில் செல்வகுமாருக்கு விருந்துபசாரம் அளிக்க ஏற்பாடு செய்திருந்தனர். இது போன்ற உபசாரங்களினால் மனிதன் செயலற்றவனாகிவிடுகிறான் என்று கூறியே அவர் உபசாரத்தை மறுத்தாராம். (ம-இ)

---

## "சமூகப்பணிக்கு ச. ச. நிலையங்கள் நல்லவாய்ப்பு"

யாழ்ப்பாணம், திங்கள்

"இளைஞர்கள் ஒன்றிணைந்து கருத்துவேற்றுமைகளை மறந்து, நாட்டுக்கு, நம் இனத்துக்கு, நம் மக்களுக்குச் சேவையாற்ற முழுமனதோடு முன்வருதல் வேண்டும். சமூகப்பணிக்கு சனசமூக நிலையங்கள் நல்ல வாய்ப்பாகும்" என்று அனலைதீவு தெற்கு சனசமூகநிலையவருடாந்தப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய அனலைதீவு உள்ளூராட்சிமன்ற உறுப்பினர் திரு. க. தயாபரராசா குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில்; "நிலையத்திற்காக பற்றும் பாசமும் கொண்டு பாடுபடுபவர்கள் அனைவரும் இந்நாட்டு மக்களின் உற்ற நண்பர்கள். பலர் எமது நிலைய வளர்ச்சிக்கு கைகொடுத்து உதவிவந்திருக்கின்றார்கள். அவர்களில் சிவதர்மவள்ளல் கனகராஜாவும் ஒருவராவார்" என்றார்.

நிலையச் செயலாளர் திரு. யோகீஸ்வரன் தனது உரையில் நம்மை எவர் தூற்றினும் நமது பணியைத் தொடர்வோம் என்றார். இதைத் தொடர்ந்து நிர்வாகசபைத் தெரிவு நடைபெற்றது.

தலைவர் திரு. க: தயாநிதி; உபதலைவர்: திரு. மு. நடராசா காரியதரிசி: திரு. நா. யோகராசா, உபகாரியதரிசி: திரு. க. ஜெகநாதன், பொருளாளர்; திரு. க. கந்தசாமி. நிர்வாக சபை அங்கத்தவராக 6 பேர் தெரிவாகினர். (கெ-அ)

---

சண்டிலிப்பாயில்

## திருட்டுப் பொருட்களுடன் இருவர் பொலிஸாரிடம் சிக்கினர்

சங்கானை, ஞாயிறு

"திருட்டுப் பொருட்களைக் கடத்திச் செல்ல பொலிசாரை ஏமாற்ற முயற்சித்த இருவரை சங்கானைப் பொலிசார் மடக்கிப் பிடித்தனர். இச்சம்பவம் சண்டிலிப்பாயில் நடைபெற்றது."

அண்மையில் சண்டிலிப்பாய்ப்பகுதியில் அடுத்தடுத்து கடைகள் உடைக்கப்பட்டு பொலிசாருக்கு பெருஞ் சிரமத்தை ஏற்படுத்தியது சம்பந்தமாக இப்பகுதியில் பொலிசார் விசேட இரவு ரோந்துகளைப் பலப்படுத்தியிருந்தனர்.

சம்பவதினம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சப் இன்ஸ்பெக்டர் ஜனைப் நியாலுடன் தலைமையில் இரவு ரோந்தில் ஈடுபட்டிருந்த பொலிஸ் கோஷ்டி சண்டிலிப்பாய் கல்வளைப் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் சுமார் மூன்று மணியளவில் சந்தேகத்திற்கிடமான வகையில் சைக்கிளில் மூன்று சாக்கு மூடைகளுடன் இருவர் சென்றுகொண்டிருப்பதை அவதானித்து அவர்களை விசாரணை செய்தபோது தாம் வியாபாரிகள் எனவும் கிளிநொச்சிச் சந்தைக்கு விற்பனைக்குச் செத்தல் மிளகாய் கொண்டு செல்வதெனவும் கூறினாராம்.

ஆனால் அந்தப் பொதி மிளகாய் ரூபத்தில் இல்லாமையால் சந்தேகம் கொண்ட பொலிசார் அதனைப் பரிசோதனை செய்தபோது மிளகாய்ப் பொதி திடீரென துணிகளாகவும் மற்றும் உப உணவுப் பொருட்களாகவும் உருமாறி இருந்தது தெரியவந்தது.

தொடர்ந்து விசாரணை செய்தபோது மானிப்பாய் ப. நோ. கூ. சங்கத்தின்கீழ் இயங்கிவரும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்கருகாமையில் இருக்கும் ப. நோ. கூ. சங்கக் கிளையில் உடைத்துத் திருடப்பட்ட பொருட்கள் எனவும் தெரியவந்தது. சூட்டிங், சேட்டிங், சேட், சாரம், சித்தை, சேலைகள், குழந்தை உடுப்புக்கள், சப்பாத்து, பவுடர், லேஸ், சீனி மற்றும் உப உணவுப் பொருட்கள் கொண்டவையே அந்தச் சாக்குப் பொதிகளில் இருந்தவையாகும். இவைகள் யாவும் சுமார் ஏழாயிரம் ரூபா பெறுமதிவாய்ந்தவை என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. சந்தேக நபர்கள் இருவரும் மல்லாகம் நீதிபதி திரு. யோகரத்தினம் முன் ஆஜர் செய்யப்பட்டு ஜூன் மாதம் முதலாம் திகதிவரை றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர். (க)

## இரங்கல் கூட்டம்

யாழ்ப்பாணம், திங்கள்

தலைவர் தந்தை செல்வாவின் இரங்கல் கூட்டம், இன்றுமாலை குப்பிழான் விக்கினேஸ்வரா வித்தியாசாலைக்கு அருகாமையில் பண்டிதர், திரு. கா. இராசையா தலைமையில் நடைபெறும். (கெ)


# தலை போகிறதா






பாடசாலை செல்லும் பிள்ளைகளின்
தாய்மார்களுக்கு அப்படித்தான்...
ஆனால் கெமெக்ஸீனைப் பற்றிக்
கேள்விப்பட்டிருந்தால்
அப்படியிருக்கத்தேவையில்லை.
தலைப்பேனை முற்றாக ஒழிக்க
துரிதமான, நம்பிக்கையான வழி
அதுவே. உங்கள் பிள்ளைகளின்
தலையில் கெமெக்ஸீனை ஒரு
தடவை உபயோகித்தாற் போதும்.
பேன் முற்றாக அழிந்துவிடும்,
மீண்டும் பேன் வராமல் தடுப்பதற்கு 3
வாரங்களின் பின்னர் மீண்டும் உபயோகி
யுங்கள் கெமெக்ஸீன் பாதுகாப்பானது,
புண்படுத்தாதது. இதமான வாசனையுடையது.

கெமிகல் இன்டஸ்றீஸ்
(கொழும்பு) லிமிட்டட்,
த. பெ. எண் 352, ஹேமாஸ் கட்டிடம்,
பிரிஸ்டல் வீதி, கொழும்பு-1.
தெலிபோன்: 28421-6.

# எம்ஜிஆர் கட்சிபதவிஏற்றால் ஊழலற்றஆட்சிஅமைக்கும்

## தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதி

சென்னை, மே 21

தமிழ்நாட்டில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால் ஊழலற்ற நேர்மையான அரசாங்கம் ஒன்றை அமைக்கும்.

இவ்வாறு அ.இ.அ.தி.மு.க. இன்று மதுரையில் வெளியிட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்துள்ளது.

அ.இ.அ.தி.மு.க. பொதுச் செயலாளர் திரு. எம், ஜி. ராமச்சந்திரன் இந்த விஞ்ஞாபனத்தை வெளியிட்டார்.

அ இ அ தி மு க கட்சி ஆட்சியில் அமைச்சர்கள் எளிமையானவாழ்க்கை வாழ்வார்கள் என்றும் நிர்வாகத்தில் தொழிலாளர்களுக்கும் பங்களிக்கப்படும் என்றும் அந்த விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## ஊர்காவற்றுறை பிரசாரக்கூட்டம்

யாழ்ப்பாணம், திங்கள்

ஊர்காவற்றுறைத் தொகுதியின் தமிழர் விடுதலைக்கூட்டணியின் பிரசாரக்கூட்டம் 26-ந் திகதி ஊர்காவற்றுறை சந்தைக்கு அண்மையில் பண்டிதர் கா பொ. இரத்தினம் தலைமையில் நடைபெறும். இக்கூட்டத்தில் செயல் அதிபர் திரு. ஏ. அமிர்தலிங்கம், திரு. வி. தர்மலிங்கம், கம்யூனிஸ்ட் வடபிரதேச அமைப்பாளர் திரு. வி. பொன்னம்பலம், இளைஞர் பேரவையைச் சேர்ந்த மாவை சேனாதிராசா, அண்ணாதாசன், காவலூர், ஐயா, சச்சிதானந்தம் உட்படப் பலர் உரையாற்றுவார்கள். (கெ)

## நிரந்தர ஊழியராகலாம்.

கொழும்பு, ஞாயிறு

கூட்டுறவுச் சங்கங்களில் தற்காலிக ஊழியர்களாகக் கடமையாற்றும் ஊழியர்களை தகுதி அடிப்படையில் நிரந்தர ஊழியர்களாக்குமாறு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் சகல சங்கங்களையும் கோரியுள்ளார்.

கூட்டுறவுச் சங்கங்களில் பலர் கூட்டுறவு ஆணைச் சட்டங்களுக்கு முரணானவகையில் மேலதிகமாக நியமிக்கப்பட்டுள்ளபோதிலும் இவர்களில் பலர் தகுதியானவர்களாகக் காணப்படுவதாலும் இவர்களை சங்கங்களின் அபிவிருத்தி குறித்து நிரந்தரமாக்குமாறு அவர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். [கா]

...

## ஆஸ்பத்திரி குறைபாடுகள்

யாழ்ப்பாணம், திங்கள்

முல்லைத்தீவு அரசினர் ஆஸ்பத்திரியில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி, உடன் நிவாரணம் பெற்றுத்தருமாறு வைத்தியசேவை உயர்அதிகாரிகளை மகஜர் மூலம், முல்லைத்தீவைச் சேர்ந்த திரு. சி. சரவணபவானந்தன் கோரியுள்ளார்.

அவர் தமது மகஜரில், 'ஆஸ்பத்திரியில் மருந்து பற்றாக்குறை, வைத்திய அதிகாரிகள் பாராமுகம், தாதிகள் குறைவு, சேவைமனப்பான்மையின்மை' பற்றி விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். [கெ]

...

## பயிற்சி இடமாற்றத்திற்கு ஆட்சேபம்

யாழ்ப்பாணம், திங்கள்

பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் ஆசிரியர் விசேட வர்த்தக பயிற்சியை கொழும்புத்துறை பயிற்சிக் கல்லூரிக்கு மாற்றவேண்டாமென அகில இலங்கை வர்த்தகமன்ற செயலாளர் திரு. மா.புவனேந்திரன் அவசர தந்தியொன்றை வித்தியாதிபதிக்கு அனுப்பியுள்ளார்.

அவர் தமது தந்தியில் குறிப்பிட்டிருப்பதாவது: போக்குவரத்து வசதியற்றதும் குடிநீர் இல்லாததும் தங்கும் வசதிக் குறைவுகள் உள்ளதுமான கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கல்லூரி பொருத்தமற்றது. இவர்கள் ஆரம்ப பயிற்சியை ஓரிடத்திலும், மீதிப்பயிற்சியை வேறு ஒரு இடத்திலும் பெறுவது விரும்பத்தக்கது அல்ல. அத்துடன் இவர்களுக்கான நூல்நிலைய வசதிகளை இரு இடங்களிலும் ஏற்படுத்துவது, வீண் செலவுகளுக்கு வழிவகுக்கும்.' [செ-அ]

## போட்டியிடுவது...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சாரத்தில் இறங்கியுள்ளனர்.

திரு எச். பீ. ஹாண்ட் என்பவரும் சுயேச்சையாக போட்டியிடவிருப்பதாக அறிவித்துள்ளார். நேற்று இவர் தேர்தல் பிரச்சாரத்தை ஆரம்பித்துள்ளார். (க)

## சமாதான நீதிபதி



யாழ்ப்பாணம், திங்கள்

சுன்னாகம்பட்டின சபையின் 3 ம் வட்டாரத்தைச் சேர்ந்த ஆயுர்வேத வைத்திய கலாநிதி திரு. ஜி. ஜோர்ஜ் யாழ்ப்பாண நீதிபரிபாலனப் பகுதிக்கு சமாதான நீதிபதியாக, நீதிஅமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் சுன்னாகம் ரே.க.பாடசாலை,சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தியாலயம் ஆகியவற்றின் பழையமாணவரும் இலங்கைஆயுர்வேதவைத்தியக் கல்லூரியின் டி.ஏ.எம்.பட்டதாரியுமாவார். சுன்னாகம் இ. மு. சங்க நிர்வாக உறுப்பினராகவும் சுன்னாகப் புனித அந்தோனியார் ஆலய பரிபாலன சபையின் தலைவராகவும், மேற்றிராசன சங்கத்தின் இளவாலைப்பிரிவின் தனதிகாரியாகவும், ஸ்ரீல. சு. கட்சியின் 3-ம் வட்டாரக்கிளையின் உபதலைவராகவும் இவர் கடமையாற்றுகின்றார்.

## "திருப்திப்படுத்துவதே நோக்கம்"

யாழ்ப்பாணம், திங்கள்

ஆதரவாளர்களைத் திருப்திப் படுத்தவே தான் தேர்தலில் போட்டியிடுவதாக திரு. ஜோன்மார்க் தம்மைச் சூழ்ந்து கொண்ட வாலிபர்களுக்கு விளக்கமளித்தார்.

தந்தை செல்வாவின் அஸ்தி நல்லடக்க வைபவத்திற்கு திரு. ஜோன்மார்க்கும் வந்திருந்தார். அவரைச் சூழ்ந்து கொண்ட வாலிபர்கள் "நீங்கள் இங்கும் நிற்கிறீர்கள், தேர்தலிலும் நிற்கிறீர்களே" என்றார்கள். அதற்கு விளக்கமளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். [கி-அ]

## கோவிற்குளத்தில் அஞ்சலி

திருக்கேதீச்சரம், ஞாயிறு

கோவிற்குளம் இந்து இளைஞர் மன்றத்தினர்கூடி தந்தை செல்வாவுக்கு அஞ்சலி செலுத்தினர்.

மன்றச் செயலாளர் திரு. பொன். இராமநாதன் பேசும்போது 'ஓராயிரம் ஆண்டு உயர்ந்த தவம்புரிந்து வாராமல் வந்த மாணிக்கத்தை நாம் தோற்றுவிட்டோம். அவர் காட்டிய வழியிலே - அவர் உருவாக்கிய ஒற்றுமை ஒளியின் துணையுடன் எமது இலட்சியத்தை அடைய முயல்வதே எமக்காக வாழ்ந்து மறைந்த பெருமகனுக்கு நாம் செலுத்தும் அஞ்சலியாகும்' என்று கூறினர்

மன்றத்தலைவர் திரு. அ. சிற்றம்பலம் உட்பட மற்றும் பலர் உரையாற்றினர். (அ)


இதயம் கனியாகும்
111 வது வெற்றித் தினம்!
மனோகரா (யாழ்ப்பாணம்) எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா வீரப்பா - நிர்மலா நடித்த
தினசரி 4 காட்சிகள்
இதயக்கனி
(ஈஸ்ட்மன்கலர்)

RIO (Jaffna) Daily 10-30, 4-45 7-15 & 9.45
CARRY ON DICK
எல்லா நோய்களுக்கும் சிரிப்பு ஒரு அருமருந்து என்பர். சிரிப்பதற்கு வேண்டிய எல்லா அம்சங்களும் நிறைந்த படம். குடும்பத்துடன் பார்த்துச் சிரித்து மெய்மறந்து அனுபவியுங்கள்.

ராணி (யாழ்ப்பாணம்) எம். ஜி. ஆர்.—லதா (இருவேடங்கள்) நடித்த
தினசரி 4 காட்சிகள்
நாளை நமதே
(ஈஸ்ட்மன் கலர்)
(ஜனத்திரள் அலைமோதுவதால் காட்சி நேரம் குறிப்பிடமுடியாமைக்கு வருந்துகின்றோம்)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) ∘ சிவாஜி ∘ தேவிகா ∘ நாகேஷ் நடித்த
தினசரி 4 காட்சிகள்
அன்னை இல்லம்

REGAL (JAFFNA) Daily: 4-45, 7-00 & 9-30 p. m.
2ND CROWDED WEEK
ALAN PRICE
ALFIE DARLING
(Color-adults only)
வயது வந்தவர்களுக்கு மட்டும்

வெலிங்டன் (யாழ். நகர்) ∘ முத்துராமன் ∘ சுஜாதா நடிக்க
தினசரி 4 காட்சிகள்
வாழ்ந்து காட்டுகிறேன்

லிடோ (யாழ். நகர்) போன்: 7693 விஜயகுமார்—லதா நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45,
சொர்க்கத்தில் திருமணம்
(கலர்)

புலோலி சினிமாஸ் (பருத்தித்துறை)
தினசரி 4-30, 7-00, 9-00
No Problem

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
ரவிச்சந்திரன்-மஞ்சுளா
புதுவெள்ளம்

வெஸ்லி [மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெய்சங்கர் - லக்ஷ்மி
கனிமுத்து பாப்பா

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன், உஷா நந்தினி, சௌகார் ஜானகி (இரு வேடங்களில்)
விஜயவேல் பிலிம்ஸாரின்
மனிதனும்தெய்வமாகலாம்
(ஈஸ்ட்மன் கலர்)

"திருவருள்" புரியும் பக்திரசமான 3-வது வாரம்.
ராஜா (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
ஏ.வி.எம்.ராஜன் கிருபானந்தவாரியார் நாகேஷ், சுந்தரராஜன், நடித்த
தேவரின்
திருவருள்
(ஈஸ்ட்மன் கலர்)

ஈழநாடு
The EELANADU

# 'யாழ் பகுதி புற்றுநோயாளர் கஷ்டம் விரைவில் நீங்கும்'

## யாழ். லயன்ஸ் கழகநிதி கையளிப்பு வைபவத்தில் உரை

யாழ்ப்பாணம், திங்.

மொழிப்பிரச்சினை, பயணப் பிரச்சினை போன்ற பலவகை இன்னல்களுக்கு இடையில் இங்கிருந்து சிகிச்சைக்காகச் சென்றார்கள். இந்த நிலையில் இங்கு நிறுவப்பட இருக்கும் புற்றுநோய் சிகிச்சை நிலையத்திற்காக லயன்ஸ் கழகத்தினர் ஆற்றியபேருதவிக்கு யாழ்மக்கள் மிக்கநன்றியுடையவர்கள். இங்குபுற்றுநோய் சிகிச்சைநிலையம் நிறுவப்பட்டதும் தமிழ்ப் பகும்நோயாளரின் மொழிக் கஷ்டமும் பிரயாணப் பிரச்சினையும்தீரும்'.

இவ்வாறு நேற்றுமுன்தினம் யாழ் இன்ஸ்'சில்நடைபெற்ற யாழ். லயன்ஸ் கழகத்தினரால் புற்றுநோய் சிகிச்சை நிலையத்திற்கெனத் திரட்டப்பட்ட நிதியை புற்றுநோய் சிகிச்சை நிலையக் குழுவிடம் கையளிக்கும் வைபவத்தில் டாக்டர் நதானியல்ஸ்பேசுகையில்குறிப்பிட்டார்.

டாக்டர் நதானியல்ஸ் தொடர்ந்து பேசியதாவது:

'எவ்வளவோ இன்னல்களுக்கு மத்தியில் மக்கள் இலங்கையின்பலபாகங்களிலிருந்தும் புற்றுநோய்ச் சிகிச்சைக்காக மகரகமவுக்குச் செல்லவேண்டியிருக்கிறது. இதனால் பல இன்னல்களையும் இடைஞ்சல்களையும் அவர்கள்ஏற்கவேண்டியுள்ளது. மொழியறிவற்றவர்கள் இங்கிலாந்து போன்ற தேசங்களுக்குச் சென்றால் எப்படிப் பலருடன் பழகும் வாய்ப்பை இழக்கிறார்களோ அதே போன்று சிங்கள, மொழி தெரியாமல் மகரகமவுக்குச் செல்கின்றவர்கள் பல இன்னல்களுக்கு உட்படவேண்டியிருக்கிறது யாழ்ப்பாணத்தில் அமைகின்ற புற்றுநோய் சிகிச்சை நிலையம் இந்த மொழி, பிரயாணம் போன்ற பல பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் இத்தகைய ஒரு நிலையத்தை நிறுவுவதற்கு நாம் முயற்சித்தபோது யாழ். லயன்ஸ் கழகத்தினர் மேற்கொண்ட இம்முயற்சி அளப்பரியசேவையாகும். அவர்களுக்கு எமது நன்றியறிதலும் பாராட்டும் உரித்தாகும்.''

### ரோட்டரிச் சங்கம் பாராட்டு

யாழ் ரோட்டரிச் சங்கத் தலைவர் திரு குணரத்தினம்பேசுகையில், ''மக்களுக்கு அத்தியாவசியமான இந்தச் சேவையை லயன்ஸ் கழகத்தினர் செய்து முடித்திருப்பது போற்றுதற்குரியது. காலத்திற்கு ஏற்ப மக்களின் தேவையறிந்து சேவையாற்றுகின்ற யாழ். லயன்ஸ் கழகத்தினர் எவ்வளவோ இன்னல்களுக்கிடையில் இம்முயற்சியில் ஈடுபட்டு இந்த நிதியுதவியை செய்ய முன்வந்துள்ளார்கள். இந்த நிதியுதவியைச் செய்வதற்கு அவர்கள் கையாண்ட வழி மிகச் சிறப்பானது இதே போன்று 78-ம் ஆண்டுக்குள் யாழ் லயன்ஸ் கழகத்தாருடன் இணைந்து யாழ்-ரோட்டறிச் சங்கமும் ஒரு களியாட்டவிழாவினை ஏற்பாடு செய்துநிதிஉதவிசெய்யும் என்று கூறினார்

யாழ் லயன்ஸ் கழகத்தலைவர் திரு- செ மகேசன் 35,000ரூபாவுக்கான காசோலையை யாழ். புற்றுநோய சிகிச்சை நிலையக் குழுத் தலைவர் சட்டத்தரணி திரு. கனகரத்தினத்திடம்கையளித்தார்.

நிதியுதவியைப் பெற்றுக் கொண்டு திரு கனகரத்தினம் உரையாற்றுகையில், யாழ் லயன்ஸ்கழகத்தினரின்சேவைக்குப் பாராட்டுத் தெரிவித்தார், இதேபோன்று இந்தச் சிகிச்சை நிலையத்தில் அக்கறை கொண்டுள்ள சுகாதார அமைச்சும் கனடா நாட்டின் ஒத்துழைப்புடன் நமக்கு உதவ முன்வத்துள்ளதாகவும்அவற்றிற்கு முன்னோடியாக இக்கழகம் இத்தகைய நிதியுதவியினைச் செய்தமை எமக்கு ஒரு பக்கத் துணையாக அமைந்துள்ளதோடு மகிழ்ச்சியையும், மனநிறைவையும் கொடுத்துள்ளது என்றும் நாம் வெகு சீக்கிரமே இந்த புற்றுநோய் சிகிச்சைநிலையம்நிறுவித் திறக்கப்படுமென்றும் தெரிவித்தார்.

இவ்வைபவத்திற்கு தலைமை வகித்து நிதியைக்கையளித்துப் பேசிய கழகத்தலைவர் சட்டத்தரணி செ. மகேசன் இந்நிதிக்குதவியவர்களுக்கும் நிதிதிரட்டுவதற்கு உதவியவர்களுக்கும் 'ஈழநாடு' பத்திரிகைக்கும் கழகச் சார்பில் நன்றியைத் தெரிவித்தார். (கா-அ)

---

## 'போட்டியிடவேண்டாம்:' கோடீஸ்வரனுக்கு கோரிக்கை

கொழும்பு, ஞாயிறு

தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பலப்படுத்தும் பொருட்டு முன்னாள் எழுதுவினைஞர்சங்கத் தலைவர் திரு. செ. கோடீஸ்வரனை எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிட வேண்டாம் என்று அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் கோரியுள்ளது.

நேற்று முன்தினம் காலை கொழும்பில் கூடிய அரசாங்க எழுதுவினைஞர்சங்க மத்திய குழு இதுதொடர்பான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

தமிழர் சுயாட்சிக்கழகத்தின் செயலாளரான திரு. கோடீஸ்வரன் கழகத்தின் சார்பில் திருகோணமலையில் போட்டியிடுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

### கண்டனம்

பத்தனை டெவன்தோட்டத்தில் பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான மலையக இளைஞனின்மரணத்திற்கு அனுதாபம்தெரிவித்ததோடு பொலிசாரின் செயலுக்கும், புசல்லாவ தோட்டத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுக்கும் இக்கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

### கூட்டணிக்கு ஆதரவு

எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணி மேற்கொள்ளும் சகலநடவடிக்கைகளுக்கும் ஆதரவு அளிப்பது என்றும் தீர்மானித்துள்ளதுடன் அமரர் செல்வநாயகத்தின் உருவப்படத்தை அரசாங்க எழுதுவினைஞர்சங்கக் காரியாலயத்தில் வைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. (ம-இ)

---

## யாழ்ப்பாணத்தில் இன்று சேக்கிழார் விழா

### தமிழக அறிஞர் கலந்து கொள்வார்

யாழ்ப்பாணம், திங்கள்

சேக்கிழார் சுவாமிகளின் குருபூசையோடு கூடிய பெருவிழா யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரிப் பிரார்த்தனை மண்டபத்தில் இன்றும் நாளையும் நடைபெறுகிறது.

இன்று காலை 10 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், சேக்கிழார் கண்ட துறவறம் என்னும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றுவார், புலவர் த. குமாரசாமிப்பிள்ளை குழுவினர் 'சுந்தரமூர்த்தி நாயனார் திருக்கயிலாயம் அடைதல்' பற்றி புராண படனம் நிகழ்த்துவர். பகல் மாகேசுரபூசை இடம்பெறும்.

இன்று மாலை 5-20 மணிக்கு வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் கோவிலிலிருந்து சேக்கிழார் திருவுருவப்படம் ஊர்வலமாகப் புறப்பட்டு யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் பிரார்த்தனை மண்டபத்தை அடையும்.

திரு. த. சோமசுந்தரம் தலைமையில் நடைபெறும் விழாவில் திரு. க. சொக்கலிங்கம் வரவேற்புரை நிகழ்த்துவார். பண்டிதை திருமதி கங்கேஸ்வரி கந்தையா தலைமையில் நடைபெறும் மகளிர் அரங்கில் திருமதிகள் வசந்தா வைத்தியநாதன், பொன். பாக்கியம், ம. திருச்சிற்றம்பலம் ஆகியோர் சிறப்புரையாற்றுவர்.

வித்துவான் சி. குமாரசுவாமி 'சேக்கிழாரின் தெய்வப் புலமை' பற்றியும், அண்ணமலை பல்கலைக்கழகப் பேராசிரியர் செ. வைத்தியலிங்கம் 'திருவடிப்பெருமை' பற்றியும் பேருரை நிகழ்த்துவர்.

நாளை மாலை திரு. எம். எஸ். ஸ்ரீதயாளன் தலைமையில் ஆரம்பமாகும் விழாவில் சிவத்தமிழ்ச்செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி 'வீடும் வேண்டா விறல்' பற்றியும் பேராசிரியர் செ வைத்தியலிங்கம் 'சேக்கிழாரின் தெய்வக்காவியம்' பற்றியும் பேருரை நிகழ்த்துவர்.

அ. இ. சேக்கிழார் மன்றம் நடாத்திய பேச்சுப்போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும்.

திருமதி பரமேஸ்வரி மகாதேவா திருமுறை இன்னிசை அளிப்பார்.

---

## இன்று ஆராய்வர்

புதுடில்லி, மே 22

கர்நாடக மாநில அமைச்சர்கள் எண்மரின் ராஜினாமா முடிவு குறித்து ஆராயும் பொருட்டு காங்கிரஸ் பார்லிமென்டரி குழு நாளை புதுடில்லியில் கூடுகிறது. (உ)

---

# எம். ஜி. ஆர். கட்சி-காங்கிரஸ் உடன்பாடுஏற்படாததுஏன்?

## சி. சுப்பிரமணியம் விளக்கம்

சென்னை, மே 22

காங்கிரஸ் கட்சிக்கும்அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் இடையிலான தேர்தல் உடன்பாடு சாத்தியமாகாதது ஏன் என்பதற்கு முன்னாள் மத்திய அமைச்சரும் பழனி தொகுதி லோகசபா உறுப்பினருமான திரு. சி.சுப்பிரமணியம் இன்று சென்னையில் விளக்கமளித்தார்

### நியாயமற்ற போக்கு

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நியாயமற்ற போக்கினால்தான் உடன்பாட்டில் முறிவு ஏற்பட்டது என்று அவர் சொன்னார்.

சென்னையில் நிருபர்கள் மத்தியில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:

'தமக்கு 200 தொகுதிகள் தேவை என்று அ இ தி மு க வற்புறுத்தியது. அ இ தி மு கவின் இப்போக்குத்தான் உடன்பாடு ஏற்படாமல் போனதற்குக் காரணமாகும்'

காங்கிரஸ் ஆட்சி அமைக்கப்பட்டால் அரசியல் ஊழல் அகற்றப்படும்' என்று கூறிய திரு சுப்பிரமணியம் 'புதிய மத்திய அரசாங்கம் ஆக்கபூர்வமான திட்டம் எதையும் செயற்படுத்தவில்லை. பத்து ஆண்டுகளில் வறுமையை ஒழிப்போம் என்று கூறுவதால் மட்டும் பலனில்லை' என்றும் சொன்னார். (உ)

---

## ஒன்பது—

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

சாரினால் தேடப்பட்டு வந்த ஒன்பதுபேரும் இன்று கைது செய்யப்பட்டு இம் மாதம் 31-ம் திகதி வரை றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

'கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து தோட்டத்திலிருந்து அபகரிக்கப்பட்டதாகக் கருதப்படும் மணிக்கூடுகள், வானொலிப் பெட்டிகள், தையல் மெஷின், நகைகள், தளபாடங்கள், கைக்குண்டு ஆகியவற்றைப் பொலிசார் கைப்பற்றினர். (ம-இ)

---

## மன்னார் மாவட்டத்தில் பரிசு பெறும் சங்கங்கள்

திருக்கேதீஸ்வரம், திங்கள்

மன்னார் மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே கடந்த ஆண்டு நடைபெற்ற போட்டியில் வெற்றிபெற்ற சங்கங்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. முருங்கன் மகாவித்தியாலயத்தில் கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. குணரத்தினம் தலைமையில் மன்னார் அரசாங்க அதிபர் திரு. என். ஜெயநாதனால் பரிசுகள் வழங்கப்பட்டன. முதலாம் பரிசு 25,000ரூபா நானாட்டான் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், இரண்டாம் பரிசு அடம்பன் ப. நோ. கூ. சங்கம் 10,000 ரூபா, மூன்றும் பரிசு வவனிக்குளம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் 5,000 ரூபா. மற்றும் 18 சங்கங்கள் பிரிவுப் போட்டிகளில் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பரிசளிக்கப்பட்டன. (அ)

---

## கிளை திறப்பு

யாழ்ப்பாணம், திங்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ் தொகுதி வேட்பாளர் திரு. யோகேஸ்வரன் இன்று ஆரியகுளம் சந்தியில் திரு எஸ் எஸ் சிவசுப்பிரமணியம் தலைமையில் கிளைக் காரியாலயம் ஒன்றைத் திறந்து வைக்கவிருக்கிறார்.

---

# இன்பம் மீது

## 4 கொள்ளைக் குற்றச்சாட்டு

கொழும்பு, ஞாயிறு

''துரையப்பா கொலை வழக்கின் 6-வதுசந்தேக நபரான க. விஸ்வசோதி ரத்தினம் அல்லது இன்பம் என்பவர் மீது வடபகுதியில் இடம்பெற்ற நான்கு வங்கிக் கொள்ளைகள் தொடர்பாக குற்றஞ்சாட்டப்படும்''

சி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் திரு. பஸ்தியாம்பிள்ளை இத் தகவலை வெளியிட்டார்.

சட்டவிரோதமாக 1.8ரிவோல்வர் வைத்திருந்ததாகவும்,வடபகுதியில் இடம்பெற்ற கார் கடத்தல் தொடர்பாகவும் இன்பத்தின்மீது குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

திங்கட்கிழமை யாழ். மேல் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ம-இ)

---

இப்பத்திரிகை 'ஈழநாடு'. லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு மே மாதம் 23-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna) Telegram: Eelanaadu Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.